12 பக்கங்கள் விலை 40 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU". Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 19—3—1978 | இதழ் 27

பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முறையா இது?

இந்தி மொழியை இங்கே திணிக்கக்கூடாது என்று தமிழ்நாட்டு மக்கள் ஒருமுகமாகக் கருதுகிறோம்.

நேற்றைக்கு கோவையில் நடைபெற்ற ஜனதா கட்சி மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வருகிற ஒரு வாசகத்தைப் படிக்கிற நேரத்தில் 'தமிழ்நாட்டில் பிரிவினைவாத பிற்போக்குச் சக்திகள், மொழி வெறியைத் தூண்டிவிடுகின்றனர்' என்று வாசகம் அமைந்திருக்கிறது. தமிழ்மொழி காப்பாற்றப்பட வேண்டும்; வேற்றுமொழி ஆதிக்கம் கூடாது; இந்திமொழி திணிப்பை ஏற்கமாட்டோம் என்று சொல்கிற நேரத்தில் அப்படி சொல்கிற சக்திகள் எல்லாம் பிரிவினைச் சக்திகள் பிற்போக்குவாதிகள், மொழிவெறியைத் தூண்டுபவர்கள் என்று ஜனதா கட்சி மாநாட்டில் ஒரு தீர்மானம் போடப்படுகிறதென்றால் — நெருக்கடி காலத்தில் சட்டங்களை வைத்துச் செய்ததை —இப்போது பிரச்சாரத்தின் மூலம் மேற்கொள்ள நினைக்கிறார்கள் என்று நாம் பொருள் கொள்வதைத் தவிர—இரண்டிற்கும் இடையே பெருத்த வேறுபாடோ, முரண்பாடோ இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 12-ந் தேதி இப்படி இவர்கள் தீர்மானம் போடுகின்ற அதே நேரத்தில்—காங்கிரஸ் கட்சி (இந்திரா காங்கிரஸ் அல்ல) காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அவர்கள் போடுகிற தீர்மானத்தில்—' இந்தியாவிலே ஜனதா கட்சியும், இந்திரா காங்கிரசும் பிராந்திய பிற்போக்கு வகுப்புவாதச் சக்திகள்'' என்று தீர்மானம் போடுகிறார்கள்.

இங்கே ஜனதா கட்சி "தமிழ்நாட்டில் பிராந்திய பிற்போக்குப் பிரிவினை மொழிவெறிச் சக்திகள்'' என்று இங்குள்ளவர்களைப் பார்த்துத் தீர்மானம் போடுகிற அதே நேரத்தில்—இவர்களைப் பற்றி அதே நாளில் புதுடெல்லியில் "பிற்போக்கு பிராந்திய வகுப்புவாதச் சக்திகள்'' என்று ஒரு தீர்மானம் வருகிறது.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம்—அரசியல் காலத்திற்கு காலம் எப்படி ஆகாயத்திலே அலைகின்ற மேகங்கள் அடிக்கின்ற காற்றிற்கு ஏற்ப உருமாறுகின்றனவோ அதைப்போல மாறுகின்றன என்பதற்கு இது அடையாளம் என்றாலும்கூட ஒரு கட்சியினுடைய கொள்கைகளை, கோட்பாடுகளை எடுத்துச் சொல்கின்ற எண்ணங்களை ஒத்துக்கொள்ள இயலாத நிலையில் அதற்கான ஆதாரங்களை வைத்து கருத்துக்குக்கருத்து என்று எடுத்துவைக்க வேண்டுமேயல்லாமல் ஒட்டு மொத்தமாக மொழி வெறியர்கள், பிற்போக்குவாதிகள், பிரிவினைவாதிகள் என்று சொல்வதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

—கலைஞர்

(சட்டமன்றப் பேருரை)

சீமான் வீட்டுச் சீக்காளி!

கருணாநிதி

"அய்யோ! அந்த உயிர் போனால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். என்மனைவிக்கு ஏற்கனவே இருதயக் கோளாறு! இப்படி ஒரு அதிர்ச்சி ஏற்பட்டால் அவள் இருதயம் 'பொசுக்' என்று நின்றாலும் நின்றுவிடும். 'குயின் மேரீ'சில் படித்துக் கொண்டிருக்கிறாளே என் குமாரி; அவளுக்கு எந்த வழியில் என்னால் சமாதானம் சொல்லமுடியும்? செய்தி கேள்விப்பட்டு அவள் ஓடோடியும் வருவாள். இந்த வருஷம் படிப்பு — பரீட்சை எல்லாம் பாழ்! பாழ்! பாழே தான்!"

—இப்படி வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே 'கோ'வென அழுதுக் கண்ணீரைக் கொட்டினார் சீமான் செங்கமலம் பிள்ளை!

அவரது மனைவி மரகதம்' ஆடாமல் அசையாமல் மரம் போல் நின்று கொண்டிருந்தாள். மரங்களின் இலைகளில் தங்கிய மழைத் துளிகள் காற்றின் அசைவில் சொட சொட வெனக் கொட்டுவது போல் அவளது விழிகள் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன. வேலைக்காரப் பொன்னனுக்கு காலும் ஓடவில்லை; கையும் ஓடவில்லை. அண்டை அயல் வீட்டாரிடமெல்லாம் சீமான் வீட்டில் ஏற்பட்டுள்ள குமுறலை எடுத்துக் கூறிப் பெரும் படை திரட்டி வந்துவிட்டான்.

தெருவாரும் ஊராரும் முக்கியப் பிரமுகர்களும் சீமான் வீட்டுக்கு அவசர அவசரமாக ஓடி வந்தார்கள். செங்கமலம் பிள்ளையின் முக விகாரத்தைக் கண்டு அவரோடு பேசவே நாவெழாதவர்களாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு, சந்தடியின்றி உட்கார்ந்து நிலைமைகளைக் கவனித்தனர்.

"டெலிபோன்" மணி அடித்தது. பொன்னன் ஓடிப் போய்ப் பேசினான்.

'அலோ! அலோ! என்னங்க?... டிரங்காலுங்களா? — மமட்ராசிலேருந்தா? கொஞ்சம் இருங்க!"

எஜமான்! எஜமான்! பட்டணத்திலேயிருந்து...... 'டிரங் கால்'ங்க......

செங்கமலம் பிள்ளை மெதுவாக எழுந்து சென்று பேசத் தொடங்கினார்.

ஹலோ!... ஹலோ!... நான் தான் செங்கமலம் பிள்ளை பேசுகிறேன்...ஓ லலிதாவா? என்னம்மா?...அப்படித்தான் எக்ஸ்டன்ஷன் ப்ளீஸ்'............

இருக்கு!.....கொஞ்சம் சீரியஸ் தான்! காலையிலே சொன்னேனே: அதேமாதிரி தான் இப்பவும் 'கண்டிஷன்' டாக்டர்கள் ஒண்ணும் பயப்படவேண்டாம்னு சொல்றாங்க! நீ வீணா கவலைப்படாதேம்மா!...... எப்படியும் பிழைக்க வைக்கிறது எங்க பொறுப்பு—என்னம்மா நீ... சின்னக் குழந்தைமாதிரி அழுகிறே?... அய்யய்யே...என்ன ...போனிலேயா அழுவுறது?

(தானும் அழுதுகொண்டே) அதெல்லாம் கடவுள் கைவிடமாட்டாரம்மா!...நீ கவலைப் படாம இரு......மணிக்கு ஒரு தடவை நிலைமையை நான் உனக்குச் சொல்லிகொண்டு இருக்கிறேன். நீங்க ரெண்டு பேரும் எனக்கு ரெண்டு கண்ணு மாதிரி!......அதிலே ஒரு கண்ணை இழக்க நான் சம்மதிப்பேனா?...... அழாதே லலிதா!......

அபாயக் கட்டம் தாண்டி நாளைக்கே உனக்கு நல்ல சேதி அனுப்புகிறேன். எல்லாம் நல்லாவே முடியும். அடுத்த மாதம் கல்யாணத்தை சந்தோஷமா நடத்தலாம்......உன் கல்யாணம் கண்டிப்பா அடுத்த மாசம் முடியும்னு ஜோஸ்யர் சொல்லியிருக்கும்போது...... அதுக்குள்ளே நம்ம வீட்டிலே எப்படி துக்கச் செய்தி ஏற்பட முடியும்?... பயப்படாதே...!

சரி...அப்புறம் பேசுகிறேன். இன்னும் ஒரு மணி நேரத்துக்குப்பிறகு போன் பண்ணு ...எஸ் எஸ்!! ம்...வச்சுடு!'

சென்னையிலுள்ள மகளுக்கு ஆறுதல் கூறிய செங்கமலம் பிள்ளை. தனக்கு ஆறுதல் கூறவல்லார் யாருமின்றி, டாக்டரின் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டே நின்றார்.

டாக்டரை அழைக்கப் போன இரண்டு 'கார்'களில் ஒரு காரின் டாக்டர் வந்து இறங்கினார். இன்னொரு 'காரி'ல் இருந்த ஸ்டெதாஸ்கோப்'பை எடுத்து மாட்டிக் கொண்டு டாக்டர் பரபரப்புடன் உள்ளே நுழைந்தார். அன்று காலையிலிருந்து டாக்டர் அங்கு வருவது ஐந்தாவது தடவை! அப்படி வந்தும் செங்கமலம் பிள்ளைக்குத் திருப்தி இல்லை!

டாக்டர் சார். நீங்கள் இங்கேயே தங்கியிருங்களேன்! எங்களுக்கு ரொம்ப பயமாயிருக்கிறது!" என்று சீமான் கெஞ்சுங் குரலில் கேட்டுக் கொண்டார்.

பயப்படாதீங்க'......நான்தான் ஒருநாளைக்கு பத்துத் தடவை வர்றேனே, பக்கத்திலேயே நர்சு வேறே இருக்கிறா...பிறகென்ன பயம்? என்று சமாதானம் கூறியவாறு உள்ளே நுழைந்தார்.

அறைக்குள்ளேயிருந்த நர்சு டாக்டருக்கு வணக்கம் தெரிவித்து உள்ளே அழைத்துச் சென்றாள். செங்கமலம் பிள்ளையும் டாக்டரைத் தொடர்ந்து உள்ளே செல்ல முயன்றார். ஆனால். நர்சு, பிள்ளையை உள்ளே வர வேண்டாமென்று ஒரு புன்னகையை வீசித் தடுத்து விட்டாள்.

எப்போது டாக்டர் வெளியே

(2-ம் பக்கம் பார்க்க)

(முதற்பக்கத் தொடர்ச்சி)

வருவார்; என்ன செய்தி சொல்லுவார்—என எதிர்பார்த்தவாறு செங்கமலம் பிள்ளையும், மரகதமும், மற்றவர்களும் ஆவலே முகத்தில் தேக்கி நின்று கொண்டிருந்தார்கள். உள்ளேயிருந்து எந்தவிதமான தகவலும் வெளியே வரவில்லை. ஒரே அமைதி! ஆழ்ந்த அமைதி!

திடீரென நர்ஸ் கலகலவென வாய்விட்டுச் சிரித்த சப்தம் வெளியே எதிரொலித்தது. ஒருவேளை அது அழுகையோ? அய்யோ மோசம் போனேமோ? என ஒருக்கணம் நினைத்துப் பிறகு தானே சமாதானம் செய்து கொண்டார் செங்கமலம் பிள்ளை.

மனசு நெருப்பா எரியுது! இப்ப என்ன சிரிப்பு வேண்டியிருக்கு! இந்த டாக்டர்களே இப்படித்தான்; கல் நெஞ்சக்காரர்கள்'' என்று முணுமுணுத்துக் கொண்டே உலவினார் சிந்தை நொந்திருந்த அந்தச் சீமான்!

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு டாக்டர் வெளியே வந்தார். “கொஞ்சம் சீரியஸ்தான்! சாயங்காலம் அஞ்சு மணிக்கு மேல்தான் சொல்ல முடியும். அதுவரையில் அபாயக் கட்டம்தான்! ஒரு முக்கியமான ஊசி மருந்து எழுதித் தர்ரேன். அதை வாங்கி வைக்கச் சொல்லுங்க. நாலு மணிக்கு வந்து அந்த ஊசியைப் போட்டா கொஞ்சம் குணம் தெரியலாம். கடைசி முயற்சிகளைச் செய்துபார்த்து விடுவோம்'' என்று கூறி, மருந்தையும் எழுதிக் கொடுத்துவிட்டு காரில் போய் ஏறிக்கொண்டார் டாக்டர்.

கண்ணீர் வழிந்தோட டாக்டருக்கு விடைகொடுத்தனுப்பி விட்டுத் திண்ணையில் நின்றவாறு ஆகாயத்தை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தார் சீமான்.

அவரது கவனத்தைத் திடீரெனத் திருப்பும் வகையில் தெருவில் ஒரு பெருங்கூச்சல்! நாலைந்து பேர் சீமான் வீட்டை நோக்கி ஓடி வந்தனர் தலைவிரி கோலமாக!

அதில் ஒருத்தி நாற்பது வயது மாது! அவள் சீமானைநோக்கி கதறினாள்!

“அய்யோ எஜமான்! என் மகள் புடவையிலேநெருப்புப் பிடிச்சு உடம்பெல்லாம் வெந்து போச்சு! புழுவா துடிக்கிறு. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும். வழி செய்யுங்க சாமி!'

—அந்தத் தாய் தரையில் விழுந்து புரண்டு புரண்டு அழுதாள்.

கொஞ்கம் காரு கொடுத்தா போதும் எஜமான்!...... உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுகிட்டுப் போனு உயிர் பிழைச்சுக்குவா!'' என்று அலறினான் அந்தப் பெண்ணின் தகப்பன்.

“காராவது—சனியனுவது!...... இஞ்ச மனுஷன் படுகிற பாடு தெரியலே!... வேதனையிலே துடிச்சிக்கிட்டிருக்கேன் ...... நேரம் தெரியாமல் வந்து உயிரை வாங்காதீங்க போங்க!'' என்று கடிந்துரைத்து விட்டுச் சீமான். தன்வீட்டுக்குள்ளே நுழைந்து இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துப் பொன்னன் கையிலே தந்து, இதை வைத்துக்கொண்டு காரிலே போய் மருந்துக் கடையில் டாக்டர் எழுதிக் கொடுத்த ஊசி மருந்தை வாங்கிவா, சீக்கிரம்!'' என்று விரட்டினார்.

பொன்னனும் காரில் புறப்பட்டான். சீமான் உதவியை நாடி வந்த அந்தத் தெரு ஏழைக் குடும்பத்தினர் தங்கள் கண்ணீரால் தாங்கள் பெற்றெடுத்த பெண்ணின் உடலைக் குளிப்பாட்டி நெருப்பால் ஏற்பட்ட எரிச்சலைத் தீர்க்கலாம் என எண்ணியோ என்னவோ வீட்டுக்குத் திரும்பினர்.

அவள் பெயர் செல்லி! செல்லம்மா என்பது இட்ட பெயர் —செல்லி சுவையோடு அழைக்கும் சுருக்கமான பெயர்! அவள்தான் அந்த வீட்டுக்கே ஒளிவிளக்கு! அவளது எதிர்காலத்தைப் பூரணப் பொலிவுள்ளதாக ஆக்கவே அந்தப் பெற்றோர்கள் தங்கள் மூச்சை உடலில் நிறுத்திக் கொண்டிருந்தார்கள் என்று கூறலாம். அன்றுடம் கூலி வேலை செய்து பிழைக்கும்குடும்பம்—அந்தக் குடும்பத்தில் இப்படி ஒரு பெரும் புயல்!

அடுப்பில் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்த செல்லியின் சேலையில் தீ பற்றியது.நெருப்புக்குத் தேவையான அழுக்கும் எண்ணெயும் செல்வியின் புடவையில் ஏராளமாக இருந்ததால் நெருப்பு வேகமாகப் பரவியது. ஆகவே, செல்வியின் உடம்பு வெந்து போயிற்று, நிற்க முடியாமல், உட்கார முடியாமல், படுக்க முடியாமல் - எதுவும் செய்ய முடியாமல் அங்குமிங்கும் ஓடியாடிக் கூச்சலிட்டவாறு துடித்தாள். சாவின் மடியில் மட்டுமேதான் அந்த எரிச்சலை அடக்கக் கூடிய குளிர்ச்சியெனும் மாமருந்து இருக்கிறது! ஆனுல் அந்த மடியில் தங்கள் மகளைக் கிடத்த ஏழைப் பெற்றோர்கள் விரும்பவில்லை. எப்படி விரும்ப முடியும்? தங்கள் உடலே தீப்பட்டதுபோலத் துடித்தனர். சீமானிடம் கெஞ்சினர்; ‘கார்’ கிடைக்கவில்லை. கடவுள் தலையில் பாரத்தைப்போட்டுவாழைக் குருத்துகளை வெட்டிப் போட்டு அதில் செல்லியைப் படுக்க வைத்துத் தங்களால் இயன்ற சிகிச்சைகளைத் தொடங்கினர்.

மணி நான்கு அடித்தது.

குறிப்பிட்டபடி டாக்டர், சீமான் வீட்டுக்குள்ளே நுழைந்தார். வாங்கப்பட்ட ஊசி மருந்து அவரிடம் கொடுக்கப்பட்டது. டாக்டர் உள்ளே போனுர். நர்சு முறைப்படி எதிர்கொண்டு அழைத்தாள். உள்ளிருந்து, என்ன செய்தி வருமோஎனக் காதையும் கண்ணையும் தீட்டிக் கொண்டு காத்திருந்தனர் சீமான் குடும்பத்தினர். பத்து நிமிடத்திற்கெல்லாம் டாக்டர் வெளியே வந்தார்.

உடனே போய் லேடி டாக்டர் 'ஜான்சியை அழைத்துவாருங்கள். என்று கூறிவிட்டு மறுபடியும் உள்ளே போனுர்.

உள்ளேயிருந்து முனகல் ஒலி தொடர்ந்து கேட்டது!

ஆ!...ஐயோ!...அம்மா!—

அது யாருடைய குரல்?

சீமான் உன்னிப்பாகக் கவனித்தார்!

அது அந்த நர்சினுடைய குரல்தான்!

இது என்ன ஆச்சரியம்?

சீமான் வியப்பிலாழ்ந்தார்.

லேடி டாக்டர் ஜான்சியும்வந்து சேர்ந்தாள்.

அவள் அறையில் நுழைந்து சில நிமிஷங்களில் டாக்டர் வெளியே வந்தார்.

சீமான் என்ன • சமாச்சாரம்?'' என்று ஆவலோடு கேட்டார்.

டாக்டர் பதில் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டார். முனகல் ஒலி அதிகமாயிற்று! வானம் இருண்டது! பயங்கர இடிகள்! மின்னல்கள்! பெருமழை! பேய்க்காற்று! எல்லாம், சிறிது நேரத்தில்!...

அறைக்குள்ளே முனகல் நின்றது! திடுமென ஒரு புதிய குரல்.

குவா! குவா!!

லேடி டாக்டர்ஜான்சிவெளியே வந்தாள்!

“சுகப் பிரசவம்தான்''!என்ருள்

யாருக்கு? என்ன விஷயம்?'' சீமான் துடிப்போடு கேட்டார்.

யாருக்குமில்லை! இங்கே டூட்டியில் இருக்கும் நர்சுக்குத்தான்'' என்ருர் சிரித்துக் கொண்டே டாக்டர்!

நல்ல வேளையாப் போச்சு' நர்சுக்குப் பிரசவம் பார்க்க என் வீடுதானு கிடைச்சுது? டாக்டர் சார் ...நீங்க வந்த வேலையைப் பாருங்க'... மணி ஐந்தாகப் போகுது!...அபாயக் கட்டம் நீங்கியதா இல்லையா ?''

இதோ...இன்னும் சில நிமிஷங்களில் தெரிந்து விடும்...

சரியா ஐந்து மணிக்குப் பிரக்ஞை வந்து கண்ணை விழித்தாகணும்—வாயைத் திறந்தாகணும் ?''

டாக்டர் தைரியமாகச் சொன்னுர். எல்லோரும் கடிகாரத்தில் முட்கள் நகருவதையே கவலையோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

டாண்! டாண்!! டாண்!!!

டாண்!! டாண்!! மணி ஐந்து அடித்தது.

டாக்டர் உள்ளே போனுர்!

ஒரே அமைதி!

திடீரென ஒரு உறுமல் சப்தம் தொடர்ந்து வள்! வள்!என்ற குரைப்பு.' ஆ! என் செல்லி பிழைத்துக் கொண்டது.'' கத்தியவாறு உள்ளே ஓடினுர் சீமான். சீமான் வீட்டுச் செல்லி பிழைத்துக் கொண்டது

ஆனுல்

தெருவிலே ஒரு பாடை போகிறது.

அதில்

பாட்டாளியின் மகள் செல்லி பவனி யோய்க்கொண்டிருக்கிறுள்!

ஒரே நாளில் ஒரே நாளேட்டில் இரண்டு செய்திகள்

இந்தியாவின் கடந்தகால வரலாறும் நிகழ்கால நிலைமையும் நாட்டின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் உறுதியான அடிப்படையில் அமைந்துவிட்டன என்று அமைதி கொள்ள முடியாத நிலை இன்னும் இருப்பதையே சுட்டிக் காட்டுகின்றன.

நாடு ஒருமைப்பாடும் ஒற்றுமையும் உள்ளதாக இருக்க வேண்டும் என்பது ஒன்று; அப்படி இருக்கிறதா என்பது வேறொன்று. அப்படி இருக்க வேண்டும் என்பது இலட்சிய வேட்கை. அப்படி இருக்கவில்லை என்பது நிலைமையின் நெருக்கடி. இந்திராகாந்தி உருவாக்கிய நெருக்கடியைவிட இந்த நெருக்கடி கொடிய நெருக்கடி. அந்த நெருக்கடியை நாடு முழுக்க உணராதது போலவே இந்த நெருக்கடியையும் உணரவில்லையோ என்பது நியாயமான சந்தேகமே

ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கின்ற, ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கின்ற சக்திகளை ஆய்ந்து உடன் களைபவேண்டியது உடனடிக் கடமை — கட்டாயக் கடமை. ஆய்வு செய்கிறவர்கள் விருப்பு வெறுப்பற்றவர்களாக வெறியுணர்ச்சிக்குத் தாங்களே ஆளாகாதவர்களாக இருந்திடவேண்டும். அப்படி அவர்கள் இல்லாதிருப்பதே நிலைமையை மேலும் மோசமாக்குகிறது. அரசியல்நிர்ணயசபைக்காலத்திலிருந்து இன்றுவரை இப்பிரச்சினையை அலசி ஆராய்ந்தும் உருப்படியான பலன் உருவாகவில்லை என்பதற்கு இதுவே காரணம்.

தேச ஒருமைப்பாட்டிற்கு, ஒற்றுமைக்கு ஒரு தேசிய மொழி தேவை என்று கூறப்பட்டபோது தேசிய மொழி ஒன்று என்றால் மற்ற மொழிகள் எல்லாம் பிற தேசமொழிகளா? என்ற வினா எழுப்பப்பட்டது. விடை—பிராந்திய மொழிகள் அனைத்தும் தேசிய மொழிகள் (National Languages) என்று அரசியல் சட்டத்தில் பதிப்பிக்கப்பட்டது.

பிறகு. இணைப்பு மொழி (Link Language)தேவைஎன்று வற்புறுத்தப்பட்டது. ஏன் ஆங்கிலம் இல்லையா இணைப்பு மொழியாக? சுதந்திரப் போராட்டத்தின்போது நாட்டின் நான்கு முனைகளையும் ஆங்கிலம் இணைக்கவில்லையா என்ற நியாயமான வாதம் எழுந்தது.

அதற்குப் பின்னரும் அப்பிரச்சினை நிர்வாக மொழி தேவை எனும் பெயரால் மறுவடிவம் எடுத்தது.

தேசிய மொழி (National Language) இணைப்பு மொழி (Link Language) ஆட்சிமொழி (Official Language) நிர்வாக மொழி (Administrative Language) என்று எந்தப் பேரிலாவது இந்தி மொழியைத் திணிக்கும் வெறி சம்பந்தப்பட்டவர்களிடம் எழுகிறதே தவிர நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் காக்கும் அடிப்படையில் மொழிப் பிரச்சினை எழவில்லை என்பதே உண்மை.

அதிர்ஷ்டவசமாக இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் நாட்டைப் பொறுத்தவரைதுரதிர்ஷ்டவசமாகத் தங்கள் மொழியைத் திணிப்பதில் நாட்டம் கொள்கிறார்களே தவிர, நாட்டின் நன்மையை நாட்டத்தில் கொள்ளவில்லை.

இம்மொழி ஆதிக்கத்தைக் கண்டு பிற மொழி மக்கள் தொடக்கத்திலிருந்தே அச்சங் கொண்டவர்களாகவே திகழ்கிறார்கள். தவிர்க்க முடியாத நிலைமைகளில் ஆத்திரம் கொள்கிறார்கள். எதிர் நடவடிக்கையில் இறங்குகிறார்கள்

ஆகவே, பிரச்சினையை உருவாக்குபவர்கள் — விரிவாக்குபவர்கள் — தீர்வு காண்பதை அரிதாக்குபவர்கள் இந்தி வெறியர்களே.

பிற மொழிக்காரர்களுக்கு நேரு ஒரு பாதுகாப்பாகத் திகழ்ந்தார். ஒருபோதும் இந்தி திணிக்கபபடமாட்டாது என்று உறுதி அளித்தார். அவர் நம்பிக்கைக்குரிய நாட்டின் நாயகர். எனவே நாடும் அவரை நம்பி அவ்வுறுதி மொழியை ஏற்றுக்கொண்டது.

ஆனால், அவருக்குப் பின்னால் மற்ற மொழியாளர்கட்கு பாதுகாப்பற்ற நிலையே உருவாகி வருகிறது என்ற அச்சம் ஆழமாக வேரூன்றி வருகிறது. சனதா அரசின் தோற்றத்திற்குப் பிறகு அவ்வச்சம் மேலும் உறுதியடைகிறது. அக்கட்சியின் தலைவர்கள் சில பலரின் கடந்தகால வரலாற்றால் அது மேலும் வளர்கிறது. அவர்களின் நடவடிக்கைகள் அதனை மேலும் வலுப்பெறச் செய்கிறது.

கருநாடக மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் பிடிவாதமாக இந்தியிலேயே பேசியுள்ளார்.

விடுதலைக்குப் பிறகு மத்திய வெளி விவகார அமைச்சர் திரு. வாஜ்பாய் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் முதன் முதல் இந்தியிலேயே பேசியுள்ளார்.

மற்றொரு மத்திய அமைச்சர் பிற மொழிகளை தாசி மொழிகள் என்று வர்ணித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் சிலரின் கடந்தகால வரலாறும் நிகழ்கால நடவடிக்கைகளும் அவர்கள் நாட்டு நலனைவிட இந்தி மொழி நலனையே விரும்புகிறார்கள் என்பதைத் தான் காட்டுகின்றன.

இதன் விளைவு எவ்வளவு ஆபத்தானது? அவ்வாபத்தான விளைவுக்கு நாடு ஆளாவதற்கு முன்னர் அவர்களே ஆளாகி விட்டார்களே! இந்தி மொழி பேசாத மாநிலங்களில் அவர்களின் சரிவு அதைத் தானே காட்டுகிறது. எவ்வளவு பெரும் தோல்வியை அவர்கள் அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தழுவிக் கொண்டார்கள்! சனதா ஆட்சியில் நாடு இரு பெரும் கூறுகவல்லவா பிரிந்து நிற்கிறது!

சட்டமன்றத் தேர்தலில் சனதாவின் தோல்விக்கான

எஃ.ஜி

காரணங்களை பிரேம் பாட்டியா என்பவர் 8—3—78ஆம் தேதி மெயில் ஆங்கில நாளிதழில் விளக்கியுள்ளார்.

“இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்புணர்ச்சிதான் தென்னாட்டில் அதன் தோல்விக்குக் காரணம். ஒரு பகுதி சனதா தலைவர்களின் கண்மூடித்தனமான இந்தி மொழி விசுவாசம்தான் தென்னிந்தியாவில் சனதா வீழ்ச்சிக்குக் காரணம். சரண்சிங், ராஜ் நாராயணன் போன்ற அமைச்சர்களின் இந்தி மொழி ஆர்வத்திற்கு பிரதமர் தேசாய் அணை போடாவிட்டால் இதனினும் மோசமான விளைவுகள்தான் தொடரும்”

கட்டுரை ஆசிரியர் பிரேம் பாட்டியா பிரதமர்மீது நம்பிக்கையோடு வினயமாக எச்சரிக்கிறார். பிரதமர் தேசாய்மீது நேரு காலத்திலேயே இந்தி மொழிப் பிரச்சினையில் பிற மொழியாளர்களுக்குச் சந்தேகம் உண்டு. இப்போது அச்சந்தேகத்தைப் போக்கும் வகையில் அவர் போக்கு இருக்குமா? அல்லது அச்சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையிலே அமையுமா?

இந்தியை யார்மீதும் திணிக்கமாட்டோம் என்று பிரதமர் தேசாய் அடிக்கடி உறுதியளிக்கிறார். இதே உறுதிமொழியை நேரு அளித்தார். நேரு வெறும் நிர்வாகத் தலைவர் இல்லை. நாட்டு மக்களின் நம்பிக்கைக்கும் அன்பிற்கும் பாத்திரமான மக்கள் தலைவர் (Mass Leader) அவர் ஒரு பிரந்தியத் தலைவர் (Regional Leader) இல்லை; தேசியத் தலைவர் (National Leader) இமயக் கொடுமுடி முதல் குமரித் திருவடிவரை அவர் புகழ் பரவிக்கிடந்தது. ஆகவே, அவர் உறுதிமொழியை நாட்டின் அனைத்துப் பகுதியினரும், அனைத்து மொழியினரும் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டனர். நேருவுக்குப் பிறகு வேறு ஒருவரும் அத்தகு ஒருபெரும தலைவராக இல்லை. எனவே, இந்தி மொழி பேசாத மக்கள் நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்க வேண்டும் எனும் கோரிக்கையை எழுப்பினார்கள்—எழுப்பி வருகின்றார்கள்.

இந்தி மொழியைத் திணிக்கமாட்டோம் என்று உறுதியளிக்கும் பிரதமர் அவ்வுறுதி மொழியைச் சட்டமாக்கமாட்டோம் என்று அதே உறுதியுடன் மறுக்கிறார், இந்திமொழி பேசாத மக்களின் சந்தேகம் வலுக்கிறது; அச்சம் வளர்கிறது. இது நாட்டிற்கு நல்லதல்ல. ஏன், சனதா அரசிற்க்குகூட நல்லதல்ல. இன்னும் சொல்லப்போனால் இப்போதே சனதா அரசிற்கு நல்லதல்ல. எனவே, பிரதமர் தம் அரசின் நன்மையையும் நாட்டின் நன்மையையும் கருதி நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்குவதே சிறந்தது.

அதே நாளேட்டில், அதே நாளில் வேறோர் செய்தியும் வெளி வந்திருக்கிறது.

அச்செய்தியும் மொழிப்பிரச்சினை பற்றி குறிப்பிடுகிறது.

கோவிந்த வல்லபபந்த்ஆறுவது நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்திய குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி மொழிப் பிரச்சினை குறித்து சிந்தித்துச் செயல்பட வேண்டிய கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்:

“மொழிப் பிரச்சினையில் மொழிச் சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கையை நிராகரிப்பது நாட்டைப் பிளவுபடுத்த ஆக்கம் தரும். இந்தி மொழியைப் பரப்புவதில் அவசரம் காட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். விருப்பத்திற்கு எதிராக இந்தியை யார்மீதும் எப்பகுதியினர் மீதும் திணிக்கக் கூடாது. மத்தியில் இருப்பவர்கள் இரு மொழிக் கொள்கையை நீடிக்கத் தயாராக இருக்க வேண்டும்.”

ஒரே நாளில் ஒரே நாளேட்டில் ஒரு பிரச்சினை பற்றி இரு செய்திகள் வெளிவந்துள்ளன, அதில் ஒன்றை வெளியிட்டவர் நாட்டின் குடியரசுத் தலைவர். சனதா அரசும் அதன் பிரதமரும் இதனை அலட்சியப் படுத்தமாட்டார்கள் என்று நம்புவோம். அலட்சியப் படுத்துவது நாட்டிற்கு மட்டுமல்ல; அவர்களுக்கே ஆபத்தானதாகும். அதைத்தான் அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. ★

காங்கிரசுக்காரர்கள் செய்த ‘நில ஆக்கிரமிப்புகள்!’

இராஜஸ்தான் மாநில முதலமைச்சரான ‘பைரோன் சிங் ஷெகாவாட்’ துணிச்சலான நடவடிக்கை ஒன்று எடுத்துள்ளார்.

நீண்ட நெடுங்காலமாகக் காங்கிரசு ஆண்ட நாட்களிலும், இந்தியாவின் ‘இருண்ட’ காலத்தின்போதும் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களை - சட்டத்திற்கு மாறாக — அமைச்சர்களும், அதிகாரிகளும். கட்சியின் முக்கிய புள்ளிகளும் ஆக்கிரமித்துக் கொண்டனர்.

தங்கள் பெயரில் மட்டுமல்லாது ‘பினாமி’யாகவும் எடுத்துக்கொண்ட நிலங்களுக்கு அளவே இல்லை.

அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி நிலவுடைமையாளர்கள் ஆனவர்களை விசாரித்து, அவர்களிடமிருந்து நிலங்களைமீட்க அரசு ஒரு ‘விசாரணைக் குழு’ அமைத்துள்ளது.

தவறிழைத்த காங்கிரசுக்காரர்களும், அதிகாரிகளும் ‘விசாரணைக் குழு’வைக் கண்டு மிரள்கிறார்களாம்!

[—‘கரண்ட்’ 11—2—'78]

நகைச்சுவைப் பட்டம் வாங்கித் தந்த

நான்கைந்து சொற்கள்!

தமிழ் என்ன பாவம் செய்ததோ, தெரியவில்லை!

ஒவ்வொரு சொல்லாக இழந்து தவிக்கும் தமிழை நினைத்து 'ஐயோ, பாவம்!' என்று அங்கலாய்ப்பதைத் தவிர நம்மால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

'கோப்பு' என்னும் மூன்றெழுத்துச் சொல்லைப் பார்த்தாலே எனக்குக் கண்ணீர் 'குபுக்' என்று வந்துவிடுகிறது. முத்துக் கோத்தாற்போல் உள்ள அந்தக் 'கோப்பு' என்னும் சொல் கூட்டங்களில் கேலிக்குரிய் சொல்லாகப் போய்விட்டதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

'கோப்பு' என்னும் இந்தச் சொல்லை உருவாக்க மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் எவ்வளவு காலத்தைச் செலவிட்டிருப்பார்கள் என்று எண்ணும்போது 'ஓ' என்று அழ வேண்டும்போல் உள்ளது நமக்கு.

கெட்டகாலம்...எனக்குத்தான்; ஒரு இலக்கியச் சொற்பொழிவில், எதையோ விளக்க வந்த நான் 'கோப்பு' என்று சொல்லித் தொலைப்பேனு! அவ்வளவுதான் 'கொல்' என்று எல்லோருமே சிரித்துவிட்டார்கள். வியர்த்து விதிர் விதிர்த்துப் போனேன் நான். நடுக்கத்தில் வாய் வேறு தந்தி அடிக்க ஆரம்பிக்க 'நீங்கள் எதற்காகச் சிரித்ததீர்கள் என்றே விளங்கவில்லை; என்று உளறிவைத்தேன்.

ஒரு மூலையில் இருந்து, 'காலம் வற்புறுத்தும்போது சொல்லுகிறேம்' என்று ஒரு குரல் வந்தது.

அவ்வளவுதான்! 'ஓ' என்ற சப்தத்தோடு 'சட...சட' என்று புளியங்காய் உதிர்ப்பதுபோல கைதட்டும் சப்தம் சேர்ந்துகொண்டது.

போதாக் குறைக்கு வெடிச் சிரிப்புகள் வேறு!

காலரா கண்டவனுக்குப் பேதி மருந்து கொடுத்த கதைதான் எனக்கு!

நிகழ்ச்சியை நாடாப் பதிவு செய்து கொண்டிருந்தார் ஒருவர்.

எனக்கு வந்த எரிச்சலில் என்ன சொல்லுகிறேம் என்றே புரியாமல், "எடுங்க...எடுங்க... நல்லா 'டேப்' எடுங்க; ஒரு நாளைக்கு இவர்களுக்கே போட்டுக் காட்டலாம்" என்றேன்.

'டேப்' என்று சொன்னேனே, அப்போது தொடங்கிய ஆரவாரமும் கைதட்டலும் அடங்கும்வரை என்னல் நிற்க முடியவில்லை. நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தேன்.

கூட்டம் கலைய ஆரம்பித்தது.

ஒருவன், 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி; முதலமைச்சர் போலவே கோப்பு 'டேப்பு' காலம் வற்புறுத்தும்போது என்று அடுக்கிக்கொண்டே போனுர் என்று என் காதில் விழவேண்டும் என்று சொன்னன்.

அப்போதுதான் எனக்குச் 'சுரீர்' என்று உண்மை விளங்கியது.

சிரிப்புக்கும், கேலிக்கும், ஆரவாரத்திற்கும், கைதட்டலுக்கும் காரணம் கூட்டம் முடிந்த பிறகுதான் எனக்குப் புரிந்தது.

'கோப்பு' என்று சொல்லிவிட்டு, வாங்கிக் கட்டிக் கொண்டபோதே புத்தி வந்திருக்கக்கூடாதா?

பொல்லாத காலம் 'காலம் வற்புறுத்தும் போது' என்று எவனே ஒருவன் சொல்லித் தொலைத்தான்.

அப்போதாவது அறிவு வந்திருக்க வேண்டும்! வந்திருந்தால் 'டேப்பு' என்று சொல்லித் தொலைப்பேனு!

நல்லவேளை; 'பொதுமக்களே! பார்த்துக்கொண்டா இருக்கின்றீர்கள்' என்று சொல்லாமல் விட்டுவிட்டேனே! சொல்லி இருந்தால் கட்டடமே இடிந்து என் தலைமேல் விழுந்திருக்கும். என்னதான் இருந்தாலும் நான் புண்ணியம் செய்தவன்தான். இல்லாவிட்டால் அந்தக் கூட்டத்திற்குப் பெண்கள் வராமல் இருப்பார்களா!

அவர்கள் வேறு வந்திருந்து, வணக்கம் சொல்லும்போது 'தாய்க்குலமே' என்று நான் அழைத்திருந்தால் ஆரம்பத்திலேயே நான் ஆட்டங் கண்டிருப்பேன்.

எப்படியோ, அன்றைய இலக்கிய நிகழ்ச்சி அரைகுறையாகப் போனது. அனுபவங்களை அறிவுரையாகக் கற்றுக்கொள்ளும் நான் அதன் பிறகு கூட்டத்தில் கலகலப்பினை உண்டாக்கும் வழியினைத் தெரிந்துகொண்டேன்.

நகைச்சுவையாகப் பேசுவது என்பது என்னைச் சுட்டுப் போட்டாலும் எனக்கு வராது.

அந்த அனுபவங்களுக்குப் பிறகு நான் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் கலகலப்பிற்குப் பஞ்சமே இல்லை!

சாமி ஊர்வலத்தில் வெடியைக் கொளுத்திப் போடுவதுபோல நகைச்சுவை தேவைப்படும் போதெல்லாம் குட்டிக்கதை சொல்வதுபோல 'கோப்பு' என்பேன். அவ்வளவுதான்! கூட்டத்தினர் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார்கள்!

சோடா குடிக்க இடைவேளை வேண்டுமா? கவலைப்படமாட்டேன். எதையாவது சொல்லும் சாக்கில், காலம் வற்புறுத்தினுல் சொல்லுவேன் என்பேன்.

தென்னகன்

சோடாவையும் குடித்து, ஏப்பத்தையும் சப்தத்தோடு சப்தமாக விட்டு, அவிழ்ந்த வேட்டியையும் சரிசெய்து கொள்வேன்.

எனக்கே சோர்வாக இருக்கிறதா? 'தாய்க்குலம்' இருக்கும்வரை எனக்கேது கவலை என்பேன்.

எனக்கு மட்டுமல்ல, எல்லாருக்குமே 'டானிக்'காக அமைந்துவிடும்.

இடையிடேயே 'டேப்பு' இருக்கவே இருக்கு! 'சிரிக்கவேகூடாது' என்று சத்தியம் செய்துவிட்டு வந்திருப்பவனைக் கூட, 'பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று சொல்லிச் சிரிக்கவைத்து விடுவேன்.

இத்தனையும் சேர்ந்து 'நகைச்சுவைப் புரட்சி நாயகம்' என்னும் பட்டத்தை வாங்கித் தந்துவிட்டன.

இப்போது கதை என்ன தெரியுமா? அழைப்பிதழில் 'புரட்சி' என்பதைப் பார்த்தவுடனேயே சிலர் சிரிக்கத் தொடங்கிவிட்டார்களாம்.

என்னதான் எனக்குப் பட்டங் கிடைத்தாலும் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறுர் என்னும் சிறப்பு கிடைத்தாலும் தமிழிலிருந்த ஐந்தாறு சொற்கள் கேலிச் சொற்களாக ஆகிவிட்ட கொடுமை மட்டும் நெஞ்சில் எனக்கொரு கிறலாகவே உள்ளது.

இப்படியே போனுல் கோப்பு, காலம்வற்புறுத்தும்போது தாய்க்குலம், பொதுமக்கள் என்னும் சொற்களின் பொருளும், தரமும் மட்டமாகிவிடுமே என்று அச்சமாக உள்ளது.

அசிங்கப்பட்டுப்போன ரத்தத்தின் ரத்தம் பற்றியோ, ஆங்கில 'டேப்பு' பற்றியோ எனக்குக் கவலை இல்லை; காரணம் இரண்டு சொற்களும் தமிழ்ச் சொற்கள் அல்ல!

இந்த நேரத்திலா இதுவும் நினைவுக்கு வரவேண்டும். அதையும் சொல்லிவிடுகிறேனே.

முதலமைச்சர் பதவி மூக்கறுக்கப்பட்டதுபற்றிச் சொல்வேன் என்று நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள்.

உண்மைதான்! சொல்லாமலேயே நீங்கள் தெரிந்து கொண்ட உண்மையை வீணுகச் சொல்லி உங்கள் வெறுப்பை வேறு தேடிக் கொள்ள வேண்டுமா; என்ன!

முதலமைச்சர் நடித்து அண்மையில் வெளிவந்த ஒரு படத்தைப் பார்த்துவிட்டு வந்தவர் சொன்னதைச் சொல்கிறேன்.

சொன்னவர் யார் என்கிறீர்களா? கிரிக்காமல் இருக்க வேண்டுகிறேன். உண்மையான பொதுமக்களில் ஒருவர் சொன்னதுதான் இது.

முதலமைச்சரும் கதாநாயகியும் கொஞ்சி விளையாடும் காட்சியைக் கண்ட ஒருவர்—அவரும் உண்மையான பொதுமக்களில் ஒருவர்தான், 'டேய், நம்ப முதலமைச்சரைப் பாருடா' என்று கத்த கொட்டகையே அதிர்வெடி சிரிப்பால் ஆட்டங் கண்டதாம்.

வள்ளுவரே விரும்பி ஓர் அதிகாரத்துக்கு 'அமைச்சு' என்று பெயர் வைத்தார். அழகும், இனிமையும் கொண்ட அருமைப்பான அந்தச் சொல், திரைப்படக் கொட்டகையில் பொதுமக்களால் கேலி செய்யப்படுவதையும் சேர்த்து நினைக்கும்போது 'செந்தமிழே! உன்னைக் காக்க எத்தனைச் சின்னச்சாமிகள் தேவையோ!' என்று ஓலமிடத் தோன்றுகிறது.

இந்த என். ஜி. ஓ.—வினர் வேறு; பொதுமக்கள் என்னும் புனிதமான சொல்லின் உயிரை எடுக்கக் காரணமாகின்ருர்கள்!

கோரிக்கைகளை வைத்துப் போராடும் இவர்கள் 'பொதுமக்கள்' என்னும் சொல்லுக்குப் பாதுகாப்பு ஏற்பாட்டினைச் செய்திருக்க வேண்டும்!

அரசு ஊழியர்கள் கோரிக்கையை ஏற்பதோ, மறுப்பதோ முதலமைச்சரின் உரிமை

'உங்களைவிடக் குறைவாக வருமானம் உள்ள ஏழைகள் இருக்க, உங்களுக்கேன் அதிக சம்பளம் என்று கேட்கும் முதலமைச்சரைப் பார்த்து,

இரவும் பகலும் உழைத்தாலும் ஐந்தோ, பத்தோ வருமானம் பெறும் 'எக்ஸ்ட்ராக்கள்' இருக்கும்போது முதலமைச்சரே! பத்தும், பதினைந்தும் இலட்சங்களாக உங்களுக்கு மட்டும் வருமானம் தேவையா? என்று கேட்பதும், கேளாமல் விடுப்பதும் அரசு ஊழியர்களின் உரிமை!

ஆனுல், எடுத்ததற்கெல்லாம் 'பொதுமக்களோடு வீதிக்கு வருவேன்; போராடுவேன்' என்று சொல்லி, 'முதலமைச்சரின் பொதுமக்கள்' என்ற புதுமையான சொல்லையுமா தமிழக முதல்வர் உருவாக்க வேண்டும் என்பதுதான் நமது கேள்வி!

'முதலமைச்சரின் பொதுமக்கள்' என்னும் சொல்லுக்கு சைக்கிள் செயின்,

சோடாபுட்டி என்று பொருள் வேறு சொல்லி நம் உள்ளத்தைப் புண்படவைப்பது ஏன்? என்பதுதான் நம் கேள்வி!

எப்படியோ, தமிழ்த்தாய் காப்பாறறப்பட்டால் சரி என்பதே எம் ஆவல்! ★

யார் அந்தப் ‘பெரியமனிதர்’கள்?

வையகத்துக்கே தமிழ் மறை வழங்கிய வள்ளுவரின் திருஉருவம் அஞ்சல் தலையில் பொறிக்கப்பட வேண்டும் என்று தமிழர்கள் எத்தனையோ ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தார்கள். எண்ணற்ற கூட்டங்களிலே. மாநாடுகளிலே குரலெழுப்பினார்கள்; உண்மைத் தமிழர்கள் அனைவருமே ஒருமித்து எழுப்பிய அந்தக் கோரிக்கை எப்பொழுது நிறைவேறியது?

ஒரு தமிழ் மகனார்-டாக்டர் ப. சுப்பராயன் மத்திய அமைச்சராக-அதுவும் அஞ்சல் துறை அமைச்சராக வந்த பின்னர்தான் தமிழர்களின் அந்த எண்ணம் ஈடேறியது.

திருக்குறளை, இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று தமிழறிஞர்களெல்லாம் எத்தனையோமுறை வேண்டுகோள் விடுத்து விட்டார்கள். அது இன்று வரை நடைபெறவில்லை.

திருவள்ளுவரின் திருஉருவச் சிலையை இந்தியத் தலைநகரில் நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை, தமிழரல்லாத எவரும் பொருட்படுத்தவேயில்லை

‘தமிழ், தமிழர். என்னும் குறுகிய வட்டத்துக்குள்ளேயே இருந்திடக் கூடாது; பரந்த தேசியக் கண்ணோட்டம் தேவை’ என்று மற்றவர்களுக்கு இதோபதேசம்’ புரி யும் ‘பரந்ததேசிய கண்ணோட்டக்காரர்கள்’ கூட. இதற்குச் செவி சாய்க்கவேயில்லை.

தமிழகத்திலிருந்து சென்று டெல்லியில் வாழும் தமிழர்களின் முயற்சியால் தான்; டெல்லிமாநகரில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது. அதுவும், தமிழ்நாட்டில் திரட்டப்பட்ட நன்கொடைமூலமே அதனை நிறைவேற்ற முடிந்தது

மூதறிஞர் இராஜாஜியின் உருவச்சிலையை டெல்லியிலே திறக்க வேண்டும் என்ற கோரிக்கைகூடத் தமிழ்நாட்டிலிருந்துதான் எழுப்பப்பட்டது தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் காட்டிய முனைப்பான ஆர்வத்தின் பயனாகத்தான், டெல்லியில் இராஜாஜி சிலை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (திராவிட முன்னேற்றக் கழகம் கூட, இராஜாஜி சிலை அமைப்புநிதிக்கு நன்கொடை வழங்கியுள்ளது. நினைவு கூரத்தக்கது.)

நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில், உள்ள படங்களில் ஒன்றுகூடத் தென்னாட்டவர் படமாக இல்லையே என்ற மனப் புழுக்கத்தை வெளிப்படுத்தி, தென்னாட்டுத் தலைவர்களின் படங்களும் இடம் பெறச் செய்யவேண்டும் என்று நமது கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் குரல் எழுப்பினர். தென்னாட்டைச் சேர்ந்த பிற கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால், இன்று வரை, மத்திய மண்டபத்தில் தென்னாட்டுத் தலைவர்களின் படங்கள் இடம் பெறவில்லை.

இப்படி. அகில இந்திய, தேசிய பரந்த கண்ணோட்டம் என்ற பெயரில், தென்னாட்டவர்கள். குறிப்பாகத் தமிழ் நாட்டினர் இருட்டடிப்புக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாவது இன்று நேற்றல்ல; தொன்று தொட்டு நடைபெறும் ஒன்றாகவே உள்ளது. இதனை நாம். சுட்டிக்காட்டும் பொழுதெல்லாம், இங்குள்ள தேசிய பரந்த கண்ணோட்டக்காரர்கள் நம்மைப் பிரிவினைவாதிகள் என்றும் ‘வடக்கு - தெற்கு பேசும் விதண்டாவாதிகள் என்றும் குற்றம் சாட்டி வந்தார்களே தவிர, இருக்கின்ற நிலைமையில் மாற்றங் காணக் கேடுகளவேனும் முயன்றார்களா என்றால் இல்லை.

தமிழ் நாட்டைச் சேர்ந்த விடுதலைப் போராட்டத்தியாக மறவன் வாஞ்சிநாதனின்நினைவாக, மணியாச்சி புகைவண்டி நிலையத்திற்கு ‘வீர வாஞ்சி’ எனப் பெயரிட வேண்டும் என்று தி. மு. க. ஆட்சி மத்திய அரசினைக் கோரியிருந்தது ஆனால் அப்பொழுது இருந்த காங்கிரஸ் ஆட்சி ‘இந்தக் கோரிக்கை குறுகிய வட்டாரப் பற்றுக் கொண்டது’ என்று கூறி ஏற்கமறுத்து விட்டது.

இப்பொழுது உலகப் பகுத்தறிவாளர் தலைவர்களில் தலைசிறந்து விளங்கி. அண்மைக் காலம்வரைவாழ்ந்து மறைந்த தந்தை பெரியார் அவர்களின்

நூற்றாண்டில் அவரது உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டது.

இந்தக் கோரிக்கையை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டது.

கடந்த 7—2—78 அன்று சென்னைக்கு வந்திருந்த மத்திய அஞ்சல்துறை அமைச்சர் திரு. பிரிக்லால்வர்மா அவர்களை, திராவிடர்கழக பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்களும் மற்றும் தி. க. தோழர்களும்சந்தித்து பொன்னாடை போர்த்தி, தமிழினமக்கள் சார்பில் அவருக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, அவர்,

‘தந்தை பெரியார் அவர்கள் தேசியத் தலைவர்; அவருக்கு அஞ்சல் தலை வெளியிடுவதற்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். அது எங்களது கடமை’ என்று கூறியிருக்கிறார்.

வருகிற செப்டம்பர் 17ஆம் நாள் பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி பெரியார் உருவம் பொறித்த அஞ்சல் தலைவெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்பொழுது திடீரென்று நாடாளுமன்றத்தில் மத்திய துணை அமைச்சர் ஒருவர் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் வினா ஒன்றுக்கு விடையளித்த மத்திய துணை அமைச்சர் நர்ஹரி பிரசாத் என்பார், பெரியார் நினைவு அஞ்சல்தலை வெளியிடும் முடிவு மறுபரிசிலனை செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்.

ஒரு மாத காலத்திற்குள் ஏன் இந்த நிலைமை மாற்றம்?

மா. செங்குட்டுவன்

பெரியார் ஒரு நாத்திகராம். அதனால் அவருக்கு நினைவு அஞ்சல்தலை வெளியிடுவது கூடாது என்று அரசுக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளனவாம். அதனால்தான் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை, மறுபரிசீலனை செய்ய மத்திய அரசு எண்ணியுள்ளதாம்.

இதுகுறித்து தமிழகச் சட்டமன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பிரச்சினை எழுப்பினார்.

“தந்தை பெரியார் அவர்கள் ஒரு நாத்திகர் என்பதற்காக அஞ்சல்தலை வெளியிடுவதை மறுபரிசீலனை செய்கிறார்கள் என்றால், ‘‘நான் ஏன் நாத்திகன் ஆனேன்?’ என்ற நூலை எழுதிய பகவத்சிங்குக்கும், தாம் ஒரு நாத்திகர் என்று உயிலில் எழுதி வைத்துவிட்டு மறைந்த நேரு அவர்களுக்கும் அஞ்சல்தலை வெளியிட்டிருக்கும்போது பெரியாருக்கு அஞ்சல்தலை வெளியிடுவதில் என்ன தடையிருக்கிறது?’’ என்று கலைஞர் கேட்டிருக்கிறார்.

நிதியமைச்சர் மனோகரனும், எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை ஆதரித்து, தமிழக மக்களின் உணர்வுகளையும், எடுத்துச் சொல்லி, ஏற்னவே மத்திய அரசு கொண்டுள்ள முடிவில் மாற்றம் கூடாது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலைமை ஏன்?

யாரோ சிலர், கடிதம் எழுதிவிட்டார்கள் என்பதற்காக மத்திய அரசு தனது முடிவை மாற்றிக் கொள்ள முனைகிறது என்றால், அந்தக் ‘கடித எழுத்தாளர்களுக்கு உள்ள வலிமை, அவ்வளவு பெரிய ஒன்றா? அரசின் முடிவையே மாற்றக் கூடிய அந்த ‘மகானுபவர்கள் யார்?

அவர்களுடைய எதிர்ப்புக் குரலைவிட வலிமை வாய்ந்த குரல் தமிழ் நாட்டிலிருந்து வெடித்துக் கிளம்பப் போகிறதே, அப்போது அதற்கு மத்திய அரசு என்ன பதில் கூறப் போகிறது?

பகுத்தறிவுத் தந்தையான பெரியார் அவர்கள் ஒரு நாத்திகர்தான்; மறுக்கவில்லை. நாத்திகர் என்பதனாலேயே அவருடைய அறிவாற்றல், தூய தொண்டு, தியாகம். விழுமிய குறிக்கோள் எல்லாம் இந்த நாட்டுக்குத் தேவையற்றனவாகி விட்டனவா? அவருடைய அரும்பணிகளால் இந்த நாடு எந்தவிதப் பயனையும் அடையவில்லையா?

ஒரு நாத்திகரின் படத்தை அஞ்சல் தலையில் பொறிப்பது கூடாது என்றால், ஆத்திகர்களின் படங்களை மட்டுமே பொறித்தாகவேண்டும் என்று அரசியல்சட்டத்தில் ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா?

மதச்சார்பற்ற (Secular-state) என்பதற்கு பொருள், மதவாதிகளின் சொல்படிதான் எல்லாம் நடக்க வேண்டும் என்பதுதானா?

மொழியின் பெயரால். இனத்தின் பெயரால், பண்பாட்டின் பெயரால் ஓர் உரிமைக் குரல் எழுந்தால் உடனே இந்திய ஒருமைப்பாடு என்ற ஆயுதத்தைக் காட்டி அந்தக் குரலை அடக்க முனைவதும். பகுத்தறிவுப் பிரச்சாரத்தை. நாத்திகவாதம் என்று கூறி மட்டந்தட்ட நினைப்பதும். தாய்மொழிப் பற்றாளர்களை ஒருமைப்பாட்டுக்கு விரோதமானவர்கள் என்றுக் குற்றஞ்சாட்டி ஒதுக்கிவிட முயல்வதும் வாடிக்கையாகி விட்டது.

மத்தியில் எந்த ஆட்சி வந்தாலும் தமிழர்களுடைய நிலையில் எந்தவித மாற்றமும் காணப்படவில்லை.

தமிழர்கள் மீது இந்தியைத் திணிக்க, இந்தி வெறியர்களும் தமிழகப் பகுத்தறிவாளர்களுக்கு எதிராக ஆத்திக மதவாதிகளும் மத்திய அரசை மிரட்டிக்கொண்டும்நெருக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தியா விடுதலை பெற்ற காலத்திலிருந்து இருந்துவரும் நிலைதான் இது!

இரண்டாவது விடுதலைப் போராட்டத்துக்குப் பிறகு அமைந்த மத்திய அரசின் நிலையிலாவது மாற்றம் இருக்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்ததில் தவறில்லை. ஆனால் எதிர்பார்த்தபடி மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதுதான் ஐயப்பாட்டுக்குரியதாக உள்ளது.

மிரட்டல் கடிதங்களாலும் ‘மொட்டைப் பெட்டிஷன்’களாலும் ஓர் அரசின் முடிவை மாற்றி விடலாம் என்றால் அத்தகைய அரசால் எதைச் சாதிக்க முடியும்?

தென்னாட்டில் காங்கிரசை வளர்ப்பதற்காகப் பாடுபட்ட முப்பெருந் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த தந்தை பெரியார்-கதர் மூட்டையைத் தலையிலே சுமந்து கொண்டு ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்த பெரியார்-மகாத்மா காந்தியின் உயிர்க் கொள்கையான மதுவிலக்குக் கொள்கையைப் பரப்புவதற்காக, தமக்குச் சொந்தமான 3000 தென்னை மரங்களை வெட்டி விழ்த்திய பெரியார், வைக்கத்திலே தீண்டாமையை எதிர்த்துப் போராடி சிறை சென்று ‘வைக்கம் வீரர்’ என்று பாராட்டப்பட்ட பெரியார், தமது தங்கையையும், மனைவியையும் ‘சத்தியாக்கிரகத்தில் ஈடு ஈடுபடுத்தி காந்தியாராலேயே வியந்து பாராட்டப் பெற்ற பெரியார், தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராகவும்,தலைவராகவும் விளங்கிய பெரியார் இன்று வெறும் நாத்திகராக மட்டுமே சிலர் கண்களுக்குத் தெரிகிறார் என்றால் அந்தச் சிலர் யார்? அவர்கள் அரசுக்குக் கடிதம் எழுதுவதன் நோக்கம்தான் என்ன? அவர்களெல்லாம் இந்துமாக் கடல் போலப் பரந்த நோக்கம் படைத்தவர்கள் என்று பொருளா? அவர்கள்தான் அப்பழுக்கற்ற தேசியவாதிகளா? தந்தை பெரியார் தேசத் துரோகியா?

இதனை மத்திய அரசு எண்ணிப் பார்த்து, நிலைமைகளை உணர்ந்து, தனது பழைய முடிவிலிருந்து மாறாது, பெரியார் அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்யும் என்றே நம்புகிறோம்.

தமிழ் மக்களின் இரத்தம் சூடேறுவதற்கு முன், அவர்களின் விருப்பம் ஈடேற வேண்டும். இதற்குக் குறுக்கே நிற்கும் ‘சக்தி’ எதுவாக இருந்தாலும் அதனை மத்திய அரசு பொருட்படுத்தத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலவைத் தேர்தல்

மிசா. ஆர். கணேசனுக்கு கழக ஆதரவு!

பொதுச்செயலாளர் பேராசிரியர் அறிவிப்பு!

வரும் ஏப்ரல் மாதம் 9-ந் தேதியன்று நடைபெற இருக்கும் சென்னை பட்டதாரிகள் தொகுதி மேலவைத் தேர்தலில் போட்டியிடும் வழக்கறிஞர் மிசா. ஆர். கணேசனுக்கு கழகம் தனது ஆதரவைத் தருகிறது என்று பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மிசா. ஆர். கணேசன் ஒரு எம், ஏ , பி.எல். பட்டதாரியாவர். அவசரநிலை காலத்தில் மிசாக் கைதியாக சென்னைச் சிறையில் ஓராண்டுக்காலம் வைக்கப்பட்டிருந்தவர். இந்தி எதிர்ப்புப் போரில் பங்குகொண்டு சிறை ஏகியவர். இவர் சென்னை மாவட்ட மாணவர் தி. மு. க, அமைப்பாளராக இருக்கிறார்!

தமிழகத்தில் ஓர் 'அகமதாபாத் கோபுரம்!'

• புதுவையார் •

அகமதாபாத்! குசராத்து மாநிலத்தின் தலைநகரம்! எத்தனையோ வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டு வளர்ந்து வரும் நகரம் இது! பழமையின் பெருமையும், புதுமையின் பொலிவும் இருபேராறுகளின் சங்கமமாக இணைந்து, இரண்டறக் கலந்து ஏற்றம் பெற்ற நகரம் இது.

அரிய வாய்ப்பாக அகமதாபாத் நகரில் ஓரிரு நாட்கள் தங்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அப்போது, கட்சிக் கொடிகளையே எங்கும் காண முடியாத வியப்பினை அங்கு அடைய முடிந்தது!

ஆண் ஒரு பக்கமும், பெண் மறுபக்கமும் இருந்து சுமை வண்டிகளை முதுகுத்தண்டுகள் முறிபட முறிபட இழுத்துச் செல்லும் உழைப்பின் பெருமையைக் காண முடிந்தது!

விளக்கில்லாமல் இரவில் விரைந்து செல்லும் மிதிவண்டிகளைத் தடுத்து நிறுத்தாத காவலர்களைக் காண முடிந்தது!

காரணம், சட்டம் அப்படிச் செல்வதைக் குற்றம் என்று கூறவில்லை என்பது தான்!

இப்படி எத்தனையோ வியப்பான காட்சிகளைக் கண்டும், கேட்டும் அடைந்த மகிழ்ச்சியினை இரட்டிப்பாக்க எண்ணினார் நண்பர் அஜீத் என்பார்.

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த கழகக் குடும்பத்தினைச் சேர்ந்த நண்பர் அஜீத் அவர்கள் அகமதாபாத் தமிழ்ச் சங்கச் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

'ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநராக உள்ளவர் தமிழ்ச் சங்கச் செயலாளராக இருப்பதும் எனக்கு 'அகமதாபாத் அதிசயமாக'வே பட்டது!

சிற்சில இடங்களைச் சுற்றிக் காட்டிய தமிழ்ச் சங்கச் செயலாளர் இறுதியாக எனக்குக் காட்டியது ஒரு மசூதியாகும்!

மசூதியின் வாயிலாக இரண்டு கோபுரங்கள் உள்ளன. இரண்டு கோபுரங்களையும் ஒரு வளைவு இணைத்துள்ளது.

நான்கணா கட்டணம் செலுத்திவிட்டு ஒரு கோபுரத்தினுள் சென்று வளைந்து வளைந்து செல்லும் படிகளின் வழியாகக் கோபுரத்தின் உச்சிக்குச் செல்கிறோம்.

அங்கே,

வெளிப்புறமாக நான் நிற்கிறேன். உள்ளே நின்றிருக்கும் நண்பர் ஒருவர் ஊன்றித் தள்ளுகிறார்.

அவ்வளவேதான்...!

கோபுரம் அசைகிறது! மெல்லிய இழையாக அல்ல; நன்றாகவே அசைகிறது.

மறுமுறையும் ஊன்றித் தள்ளச் சொல்கிறேன்.

வியப்பு. வானமாக விரிகிறது.

ஆம், கோபுரம் நன்றாக அசைகிறது.

எழுபத்தைந்து அடி உயரக் கோபுரம் அசைகிறது; உச்சியில் நிற்கும் என் உடலும் ஆடுகிறது; உள்ளமும் ஆடுகிறது.

விழுந்துவிடுவோமோ என்ற அச்சத்தோடு 'விழுந்தால் நம் கதி—? என்னும் அச்சமும் சேர்ந்து கொள்கிறது.

பின்னென்ன?

இறுக்கமாகக்கோபுரத்தை பிடித்துக் கொள்கிறேன். கைகளோடு போட்டியிட்டுக் கண்களும் இறுக்கமாக மூடிக் கொள்கின்றன.

என்றாலும், கோபுரம் விழவில்லை என்ற எண்ணம் மெதுவாக எழுகிறது! எனவேதென் போடும், மனத் தெளிவோடும் நிற்கிறேன்.

ஐநூற்று இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தக் கோபுரம் இப்படிச் சிலரால் ஆட்டப் படுகிறது. கோபுரம் ஐநூற்று இருபத்தைந்து ஆண்டுகளாக அசைந்துகொடுக்கிறது; ஆனால் விழவே இல்லை.

இன்னுமொரு வியப்பு.

ஒரு கோபுரம் அசையும் போது மற்றொரு கோபுரமும் சேர்ந்தே அசைகிறது.

கட்டிடக் கலையின் வியப்புக் களமாக உள்ள இந்தக் கோபுரத்தை (Shaking Tower) அசையும் கோபுரம் என்று அழைக்கிறார்கள்.

அசைகிறது. ஆனால் விழவில்லை; இந்த அற்புதமான அதிசயத்தின் அடிப்படைத் தத்துவத்தை எந்த மேதைகளும் இதுவரை 'இது' எனச் சுட்டிக் காட்டவில்லை.

கோபுரத்தைக்கண்டுவிட்டு ஆட்டோ ரிக்ஷாவில் அமருகின்றேன். வண்டியும் ஓடுகிறது; என் மனக்கண்ணில் ஒரு வரலாறும் ஓடுகிறது.

அகமதாபாத் அதிசய அசையும் கோபுரம் போல் தமிழகத்திலும் ஓர் அதிசய அசையும்கோபுரமிருப்பதை என் உள்ளமும் உணர்வும் எடுத்துக் காட்டின.

அந்தக் கோபுரம், அண்ணா தந்த கழகம் என்னும் கோபுரமே!

அகமதாபாத் கோபுரத்தை உருவாக்கிய பொறி இயல் வல்லுநர், அத்தகு ஆற்றலை எத்தனையோ மேதைகளிடம் பெற்றிருப்பார்.

இன நலப் பாசறையாம் கழகமெனும் கோபுரத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா, டாக்டர் நடேசனார், வெள்ளுடை வேந்தர் தியாகராயர்! டாக்டர் நாயர் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் என்னும் பெருந்தகையார்களிடம் பெற்ற அறிவினையும் ஆற்றலினையும் அன்றே அடிப்படையாக்கியுள்ளார்.

திராவிடர் சங்கமாக, தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக சுயமரியாதை இயக்கமாக, திராவிடர் கழகமாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற பாசறைதானே, இன்று தி. மு. கழகம் என்னும் உருக்குக் கோட்டையாக உருவெடுத்துள்ளது; உணர்வுக் கோபுரமாக எழுந்துள்ளது.

ஐந்நூற்று இருபத்தைந்து ஆண்டுகளாக அந்தக் கோபுரத்தை—அதிசயமான அகமதாபாத் கோபுரத்தைப் பார்த்து, 'நம்மால் முடியவில்லையே' என்னும் நச்சு மனத்தினர் எத்தனைப் பேர் வயிறெரிந்து வசைபாடி இருப்பார்கள்!

ஏறக்குறைய நூற்றாண்டுத் தமிழக வரலாற்றை ஒருமுறை எண்ணிப் பார்ப்போமே.

திராவிடர் சங்கத்திலிருந்து தி. மு. கழகம் வரை என்னும் கால கட்டத்தை ஒரே ஒரு முறை ஆராய்ந்து. பார்ப்போமே

ஆங்கில அடிமைகள் விடுதலைப் பகைவர்கள் என்றுதொடங்கிய வயிற்றெரிச்சல். வசவுகள் எப்படியெப்படிவடிவங்கள் எடுத்துள்ளன!

இன வெறியர்கள் என்றார்கள்; இறை மறுப்பு நாத்திகர்கள்என்றார்கள் குறைமதியினர் குறுகிய மனத்தினர்; பிரிவினைவாதிகள்; பேதத்தை வளர்ப்போர்; தேசிய விரோதிகள்; தீய நெஞ்சினர் என்றெல்லாம் அர்ச்சனை செய்தார்கள்!

அகமதாபாத் கோபுரத்தைப்போலவே அண்ணா தந்த கழகக் கோபுரமும் அத்தனை ஆராதனைகளையும் தாங்கியே வந்தது; இன்றும் தாங்கியே வருகிறது.

ஐநூற்று இருபத்தைந்து ஆண்டுகளாக அகமதாபாத் அதிசய கோபுரத்தை ஆட்டிப் பார்த்தவர்தம் கணக்கைக் கூறமுடியுமா? அசைத்து மகிழ்ந்தவர்தம் தொகையை எண்ணிப் பார்க்கமுடியுமா?

அவர்கள் எல்லாம், ஆட்டிய மகிழ்வில் மிதந்தார்கள். ஆனாலும் அதிசயக் கோபுரம் இன்றும் நிலையாக இருக்கிறது. அவர்களெல்லாம், அசைத்துவிட்ட இன்பத்தில் ஆனந்தப் பட்டார்கள். ஆனாலும், அகமதாபாத் கோபுரம் இன்றும் நிலையாக இருக்கிறது. நாளையும் நாளை மறுநாளும், அதற்குப்பிறகும் அடுத்தடுத்து ஒவ்வொரு நாளும் அதிசய கோபுரத்தைஅசைத்துப்பார்த்துப்பல்லாயிரவர்மகிழத்தான் போகின்றார்கள்; பல இலட்சம் பேர் அதிசயக் கோபுரத்தின் ஆட்டத்தைப் பார்த்து ஆனந்தப் படத்தான்போகின்றார்கள்; பல கோடிப் பேர் அகமதாபாத் அசையும் கோபுரத்தால் இன்பம் பெறத் தான் போகின்றார்கள்.

அப்போதும், அகமதாபாத் கோபுரம் ஆனந்தப்படுபவர்களைப் பார்த்து அலட்சியப் புன்னகையைஉதிர்ப்பதுபோல் மெல்லென அசைந்துவிட்டு நிலையாக நிற்கத்தான் போகிறது

காரணம், அதன் அடித்தளம் அப்படி! அதை உருவாக்கிய அறிஞரின் திறம் அப்படி!

கழகக் கோபுரத்தையும் ஒருமுறை எண்ணிப் பாருங்கள்! திராவிட சங்கம் தோன்றியபோது 'இது வாழும்' என்றவர்கள் உண்டா? இல்லை! 'உமிபோல் இதை ஊதிவிடுவோம்' என்று உறுமியவர்களும் உண்டு; ஒழிந்தது என்று மகிழ்ந்தவர்களும் உண்டு

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக உருவெடுத்து, நீதிக் கட்சி என்னும் பெயரால் நாட்டினர்தம் நெஞ்சங்களில் உறவாடியபோது 'இது வாழும்' என்றவர்கள் உண்டா? இல்லை!

"பொடியாகும்; அளந்தால் அரைக்கால் படியாகும்' என்று போர்க்களம் அமைத்தவர்களும் உண்டு; 'போயிற்று' என்று பூரித்தவர்களும் உண்டு!

திராவிடர் கழகமாக வீறுகொண்டு எழுந்து, 'கடவுள் இல்லாத கட்சி' என்றும், 'கருப்புச் சட்டைக்காரனுங்க' என்றும் காலம் நம்மைப் பார்த்து மிரட்டியபொழுது 'இது வாழும்' என்றவர்கள் உண்டா? இல்லை!

'நேற்று தப்பியது, நாளை, இருக்காது' என்று நாள் குறித்தவர்களும் உண்டு; நம்பித் துள்ளியவர்கள் உண்டு! ஆனால், சில நேரங்களில் அசைந்திருக்கலாம்; சில வேளைகளில் ஆடியும் இருக்கலாம். வீழ்ந்த வரலாறு உண்டா? இல்லை.

வீழ்த்த நினைத்தவர்களைப் பற்றி அவர்தம் வீட்டினர்க்கே நினைவில்லையே தவிர, திராவிடர் இயக்கத் தேரின் ஓட்டத்தை எந்த முட்டுக்கட்டைகளும் தடுத்திட முடியவில்லை!

திராவிடர் இயக்கம் இன்று தி. மு கழகம் என்னும் திருப்பெயர் பூண்டு தென்திசைத் தீபமாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது!

கருவிலேயே தி. மு. கழகத்தைக் கலைக்க நினைத்தவர்கள் உண்டு. உருவாகி ஒரு நாள் குழந்தையாகக் கிடந்த பொழுதிலிருந்து இன்று வரை தி. மு. கழகத்தைத் தீர்த்துக் கட்ட திட்டமிட்டவர்கள் கணக்கை நினைத்துப் பாருங்கள்

குறளுருவாம் அண்ணா கொட்டும் மழையில் தி. மு. கழகத்தைத் தொடங்கியநாளிலிருந்து துரோகிகளால்துளைத்தெடுக்கப்பட்டுஎஃகுத்தூணாக எழுந்து நிற்கும் இன்றுவரை வெட்டி வீழ்த்த நினைத்தவர்களை ஒரு முறை எண்ணிப் பாருங்கள்!

உடம்பெல்லாம் மூளையாயாகக் கொண்டவர்கள் அசைத்துப் பார்த்தார்கள்!

அவர்களின் உள்ளம் மாயக் களிப்பில் மூழ்கும்படி அசைந்ததுண்டு கழகம்

ஆனாலும், வீழ்ந்ததா? இல்லை.

உழைப்பாலே உயர்ந்து மக்களின் உள்ளங்களில்உயர்ந்திருந்தவர்களும் பொறுமை எனும் ஆயுதத்தால் பொடியாக்க நினைத்ததுண்டு.

நம்மால் ஆகாததா! என்று அவர்கள் நகைப்பினை உதிர்க்கும்படி கழகக் கோபுரம் அவர்களின் கண்களுக்கு அசைவது போல் தெரிந்ததுண்டு.

ஆனாலும், சாய்ந்ததா? இல்லை,

கற்பாறை போன்று கனன்று மோதியவர்களும் உண்டு.

'சாய்கிறது... சாய்கிறது' என்று அவர்கள் சாய்ந்தார் தார்களே தவிர கழகக் கோபுரம் தன்னிலையில் தாழாமல் தான் நின்றது. நிற்கிறது!

பட்டங்கள் எதிர்த்தன, பதவிகள் மோதின; ஆட்சி அதிகாரங்கள் ஆணவத்தோடு முட்டின. கண்ட பலன், அவைகளின் கைகள் ஓய்ந்தன என்பதுதான்!

சிறைச்சாலைகளும். சித்திரவதைகளும் கொலைகளும், கொடுமைகளும் கழகத்தைப் பார்த்துக் கொக்கரித்தனவே தவிர கொண்ட வெற்றி உண்டா? இல்லை! —

பவுடரும், பழியும் பார்த்து 'விடுகிறேன் ஒரு கை' என்று பாய்ந்ததுண்டு 'சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு' என்று சதிகளும் துரோகமும் துள்ளிக்குதித்ததுண்டு!

ஆனால், நடந்ததென்ன?

அடாது பெய்த அந்த விடாத மழையால் கரைந்து விடும் கழகம் என்று கற்பனை செய்தவர்களின் கதையினைக் காலம் முடித்து வைக்கும் காட்சியினைத்தான் கண்டு வருகிறோமே தவிர கழகம் தன்னிலையில் தாழாமல் தலை நிமிர்ந்துதான் நிற்கிறது! நிற்கப் போகிறது!

இந்திரா காந்தி நெருக்கடியோடு கழகம் இல்லையென ஆகும்? என்று எத்தனைப்பேர் கற்பனைக் கடலில் ஓடம் விட்டார்கள்!

சதிவழக்கு, சர்க்காரியா கமிஷன் என்று பீரங்கி வைத்துப் பிளந்தெறிய எத்தனைப் பேர் ஆசைக்குதிரை ஏறி ஆகாயத்தில் பயணம் செய்தார்கள்

கழகம் எனும் கோபுரம் அசைந்ததாகத் தெரிந்தது. ஆடியதாகத் தெரிந்தது சாய்வதாகத் தெரிந்தது ஆனால், வீழ்ந்ததா? இல்லை.

கோபுரம் நிற்கிறது! கொடுமைகள் சாய்ந்தன! பகைத்தவர்களும், பழித்தவர்களும் நாட்டின் பாவச் சின்னங்களாகநடமாடுகின்றனரே தவிர நம் கழகம் நாட்டு மக்களின் நாடி நரம்புகளாக, இரத்த ஓட்டமாக, இதயமாக. எதிர்கால நம்பிக்கை ஒளியாகத் தன்னிலையில் தாழாமல் தலைநிமிர்ந்து நிற்கிறது— நிற்கப் போகிறது.

அகமதாபாத் அதிசயக் கோபுரம் போல், அண்ணா தந்த கழகக் கோபுரமும் என்றென்றும் நின்று நிலவும்' தமிழகத்தின் நீடுதுயில் நீக்கப் பாடி வரும் நிலவாகத் தமிழினத்தின் உள்ளம் என்னும் வானில் நேற்று உலவி வந்ததைப் போல் இன்றும் உலவி வரும். இன்று உலவி வருவதைப் போல் என்றும் உலா வந்து கொண்டே இருக்கும்!

வாழ்க அண்ணாவின் . வழி!

வளர்க தி. மு. கழகம்'

வெல்க மான மறவன் கலைஞர்!

சித்தர்கள் அல்லர்; எத்தர்களே!

விபூதி கொட்டச் செய்தல், கைக் கடிகாரங்களை வரவழைத்தல், மணலைக் கீதைப் பிரதிகளாக மாற்றுதல் போன்ற — தெருவோரத்து மந்திரவாதியின் 'கண்கட்டு' வித்தைகளைச் செய்வதன் மூலம்—தன்னை ஒரு 'கடவுளாக'ப் பிரகடனம் செய்து வருகிறார் சாயிபாபா!

அந்த 'மாயாஜாலங்களை'ச் செய்து காட்டிய நாத்திகச் செம்மல் கோவூரார், 'நீ ஒரு கடவுள் என்றால் அதை என் முன் மெய்ப்பித்துக் காட்டு' என்று எத்தனையோ தடவைகள் சாயிபாபாவுக்கு அறைகூவல் விடுத்தும், இந்நாள் வரை 'குரோட்டன்ஸ் தலை'க் கடவுளிடமிருந்து பதிலேதும் வரவில்லை. மாறாக, 'நான் ஓர் ஆழம் காண முடியாத கடல்' என்றும் 'சிற்றெறும்புகளால் என் மகாத்மியத்தை உணர இயலாது' என்றும் ஏதேதோ 'சால்ஜாப்பு'கள் சொல்லிக் கொண்டிருக்கிறார் (அ)சத்திய சாயிபாபா! இவ்வாறு இந்தியாவில் சாயிபாபா 'சித்தர்' போர்வையில் எத்து வேலைகள் செய்து கொண்டிருக்க—அவரைப் பின்பற்றி வெளிநாட்டில் சிலரின் மூடத்தனமான பக்தியைக் காசாக்கிக் கொண்டிருக்கிறார் மகேஷ் யோகி என்ற ஒரு நபர்!

'தியானத்தின் மூலம் ஒருவரை அந்தரத்தில் அமரச் செய்யவும் சுவரின் மீது நடந்துசென்று யாரும் காணாதவாறு மறைந்து போகும்படிச் செய்யவும் என்னால் முடியும்' என்று சொல்லி வெளிநாட்டினரை ஏமாற்றி வருகிறார் மகேஷ்யோகி. அதற்காக அவர் கேட்கும் தொகை எவ்வளவு தெரியுமா? பத்தாயிரம் டாலர்கள்! அதுமட்டுமா? வெளிநாட்டுக்காரர் ஒருவருக்கு 'ஓம்' என்ற மந்திரச் சொல்லைக் கற்றுத்தர அவர் வசூலிக்கும் தொகை—நூற்றைம்பது டாலர்களாம்!

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு 'யோகி' நீரின்மீது நடக்கப் போவதாக அறிக்கை விடுத்தார். அவருடைய 'ஜால்ராக்கள்' இடைவிடாது பிரச்சாரம் செய்து ஏராளமான அனுமதிச் சீட்டுக்களை விற்றார்கள். அனுமதிச் சீட்டின் விலை — நூறு ரூபாய்! இதில் வெட்கக்கேடு என்னவென்றால், உயர் அதிகாரிகளிலிருந்து அமைச்சர்கள் வரை அந்த 'அற்புதத்தை'க் காண முண்டியடித்துக் கொண்டு வந்தார்கள். அந்தோ! யோகி, நீர் பரப்பின் மீது ஒரு காலை எடுத்து வைத்ததுமே 'தடால்' என்று நீரினுள் மூழ்கினார்......

மனிதன் நீரின்மீது நடந்து செல்லும் விசித்திரத்தைக் காண வந்த மடையர்கள் கூட்டம், ஆத்திரமடைந்து தங்கள் மேனிகளைப் புண்ணாக்குவதற்கு முன் யோகியும் அவருடைய 'ஜால்ராக்களும்' வசூலித்த பணத்தைத் திரும்பத் தந்துவிட்டார்கள்.

மகேஷும் அப்பேர்ப்பட்ட 'அயோக்கிய சிகாமணி'யான ஒரு யோகியே என்பதை வெட்ட வெளிச்சமாக்கக் கிளம்பியிருக்கிறார் ஒருவர் — அவர் நாத்திகரல்லர்!

'சுவாமி விஷ்ணு தேவனந்த மகாராஜ்' என்ற நீண்ட பெயருடைய அவர் கடவுள் நம்பிக்கை கொண்டவர்தான். ஆனாலும், பாமர—படித்த மக்களின் கடவுள் நம்பிக்கையைப் பயன்படுத்தி அவர்களை முட்டாள்களாகவும், ஏமாளிகளாகவும் ஆக்கிப் பொருளீட்டும் மகேஷ்யோகி, சாயிபாபா போன்றோரின் மோசடிகளை அம்பலமாக்க வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டுள்ளார்.

ஐம்பது வயதான 'சுவாமி விஷ்ணு' அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது மகேஷ் யோகி சாயிபாபா, பாலயோகி போன்றோரின் 'தில்லுமுல்லுகளை' வெளிப்படுத்தினார்.

அப்பேட்டியின் சில முக்கிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன:

கேள்வி: மகரிஷி மகேஷ் யோகிக்கு எதற்காக நீங்கள் சவால் விடுகிறீர்கள்?

பதில்: பரம்பரை பரம்பரையாக வரும் இந்தியாவின் ஆத்மார்த்த நம்பிக்கைகளைக் காப்பாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்; குறிப்பாக மேலை நாடுகளில், தத்துவ போதனை அளிப்பதற்கென்று மேலை நாட்டிற்கு வரும் எல்லா 'ஏமாற்றுக்கார' யோகிகளையும், 'சாமி'களையும் இவ்வாறுதான் முறியடிக்க வேண்டும். இப்போது அவர்கள் ஐந்தாயிரம் டாலர்கள் கொடுத்தால் அந்தரத்தில் பறக்கவும் சுவரில் நடக்கவும் இயலுமெனச் சொல்லி விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

கே: இவைகளெல்லாம் ஏமாற்று வேலைகள் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

ப: நிச்சயமாக; மோசடிக்காகவும், ஏமாற்றுத்தனமான விளம்பரம் செய்வதற்காகவும் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள்.

கே: குற்றவாளிகள் என யாரைச் சொல்கிறீர்கள்?

ப: மகேஷ்யோகியும், அவருடைய அமைப்பாளர்களும். நாங்கள் ஒரு குழுவை நியமித்துள்ளோம். எங்களுடைய அறைகூவலுக்கு அவர்களிடமிருந்து ஏதாவது பதில் வருகிறதா என்று இன்னும் சில நாட்கள் நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.

கே: ஒரு 'கிரிமினல்' குற்ற நடவடிக்கையாக இது இருக்குமா?

ப: ஆம்;......மேலை நாட்டில் இந்த 'எத்து' வேலையைச் செய்பவர் மகேஷ்யோகி. இந்தியாவில் இதைச் செய்பவர் சாயிபாபா!

கே: சாயிபாபாகூட ஒரு மோசடிக்காரர்தானா?

ப: ஆம்; சாயிபாபாவும் மகேஷ்யோகியும் மனித சிந்தனையில் பேரழிவை உருவாக்குகிறார்கள். சாயிபாபாவைக் காட்டிலும் உண்மையில் 'மாத்தூர் யோக்கியர்.

[மாத்தூர், 'மாயாஜாலம்' செய்து காட்டுகிறவர். அவர் நாற்காலிக்கு மேல் ஓரடி உயரத்தில் அந்தரத்தில் இருக்கும் புகைப்படத்தை சுவாமி விஷ்ணு பத்திரிகையாளரிடம் காட்டி 'தேர்ந்த புகைப்பட நிபுணரின் திறமைதான் இது. இதைத்தான் மகேஷ்யோகி செய்து காட்டப் போகிறார்' என்றார்.]

கே: அந்தரத்திலிருப்பது, காற்றில் மறைவது குறித்து தத்துவரீதியாக, அல்லது வேத நூல்களில் ஏதாவது கூறப்பட்டுள்ளதா?

ப: வேத நூல்களில் இது குறித்துப் பல விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன; மதுராவுக்குக் 'கிருஷ்ணபரமாத்மா கூடுவிட்டுக் கூடு பாய்ந்து சென்றார்' என்று கூடச் சொல்லப்படுகிறது.

மகேஷ்யோகி, எப்படி அந்தரத்திலிருப்பது, சுவர்களிடையே சென்று எப்படி மறைவது என்பதுபற்றி எல்லாம் கற்றுத் தருகிறாராம். இவைகளைக் காட்டும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு தரப்படுகின்றன; உண்மையில் புகைப்படக் கருவியின் நுணுக்கமான தந்திரங்கள்தான் இவைகள்.

இந்தத் தந்திரங்களைப் பயன்படுத்தி ஐந்தாயிரம் டாலர்கள் என்ற கணக்கில் வசூல் செய்து மக்களை ஏமாற்றுகிறார் மகேஷ்யோகி. மூன்று

ஜாகீர்

மாதப் பயிற்சியில் இதைச் செய்வதாக ஒரு ஒப்பந்தத்தில் அவர்கள் கையெழுத்து வாங்குகிறார்கள்; இறுதியில் சலிப்படையும் அளவுக்கு ஆண்டுக்கணக்காக இப்பயிற்சி நீடித்துக் கொண்டே போகிறது.

கே: மகேஷ்யோகி ஏராளமான பணம் சேர்த்திருப்பாரே?

ப: ஆள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் டாலர்கள்என்று அவர் வசூல் செய்கிறார். இதுவரை ஆயிரம்பேர் சேர்ந்திருந்தாலும் ஐம்பது இலட்சம் டாலர் அவர் சம்பாதித்திருப்பார்.

கே; இன்றைய உலகில் அந்தரத்தில் நிற்பது ஆகக்கூடிய செயலா?

ப: **விஞ்ஞான ஆராய்ச்சியின் கீழ் இதுவரை யாரும் அதை மெய்ப்பித்தது கிடையாது.**

கே: மகேஷ்யோகி இதை யாருக்காவது மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறாரா?

ப: இல்லை... பத்தாயிரம் டாலர்கள் செலுத்தினால் பொதுமக்கள் முன் மெய்ப்பித்துக்காட்டுவதாக அவர்கள் கூறியுள்ளார்கள். அத்தொகையைச் செலுத்த நான் ஒப்புக்கொள்கிறேன். பத்து நாட்களுக்குள் அவர்களிடமிருந்து பதில் வருகிறதா என்று பார்ப்பேன். வராதென்று நிச்சயமாக எனக்குத் தெரியும். ஏற்கனவே மோசடித் தடுப்புக் குழுவுக்கு இதுபற்றித் தெரிவித்து விட்டேன்

கே: அது அரசாங்க அமைப்பா?

ப: ஆம். மோசடித்தனமான விளம்பரங்களைக் கண்டுபிடிக்கும் அரசாங்க அமைப்பு அது.

கே: ஏற்கனவே அவர்கள் கனடாவில் விசாரிக்கப்பட்டதாகக் . கேள்விப்பட்டேனே...

ப: ஆம்- **இவ்விசாரணைகள் மெதுவாக நடக்கின்றன. அவர்கள் நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்லாதவரை எந்த மாற்றமும் நிகழப் போவதில்லை**

கே. அவர்களை நீதிமன்றத்திற்கு நீங்கள் கொண்டு வருவீர்களா?

ப: ஆம். எங்கள் சார்பாக என்னுடைய வழக்கறிஞரான மாணவர் ஒருவர் இதைச் செய்வார்.

கே: இம்மாதிரியான மோசடித்தனமான விளம்பரங்கள் செய்தால் அதற்கு என்ன தண்டனை கிடைக்கும்?

ப: இது ஒரு 'கிரிமினல்' குற்றம்.

கே: அவர் (மகேஷ்யோகி) 'கம்பி எண்ண' வேண்டி வருமா?

ப: அவர் கனடாவிலிருந்து ஸ்விட்சர்லாந்துக்குத் தப்பிச் செல்ல எத்தனிக்கலாம்.

கே: தியானங்களைக் கற்றுத் தருவதால் பயனேதுமில்லை என்கிறீர்களா?

ப: மகேஷ்யோகி, தம் மாணவனுக்கு 'ஓம்' என்ற சரியான மந்திரத்தை 'ஏம்' என்று தவறாக உச்சரிக்கக் கற்றுத் தருகிறார். இந்த ஏம் என்ற ஒரே ஒரு சொல்லைக் கற்றுத் தரவே நூற்றைம்பது டாலர்களைக் கறந்து விடுகிறார்...

மாட்டுக்கறி தின்பது...... மதுபானமருந்துவதுபோன்ற எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொண்டு, மந்திரங்களை ஜெபிப்பதால்—நேராகச் சொர்க்கத்திற்கே போய்விடலாம் என்றுநினைத்தால் அது இயலாது... மனிதனுக்கு 'சுய கட்டுப்பாடு' வேண்டும்.

மகேஷ்யோகி சில மந்திரங்களைக் கற்றுத்தர பணம் வசூல் செய்கிறார்; இதுஎப்படி இருக்கிறதென்றால் பத்துக் கட்டளைகளைச் [Ten command ments] சொல்லித் தர ஒருவர் காசு கேட்பதைப்போல் இருக்கிறது. வேதமந்திரங்களின் மொத்த குத்தகைக்காரன் நானே' என்று சொல்லிக் கொண்டு அதைக் கற்க விரும்புகிறவர்களிடம் வசூல் செய்கிறார் மகேஷ்யோகி.

கே: நீங்கள் எவ்வளவு வசூல் செய்கிறீர்கள்?

ப:— வியாபார நோக்கோடு இவைகளைச் செய்யக்கூடாது; ஒரு மாணவன் தன் 'குரு'வுக்கு மனமுவந்து காணிக்கை செலுத்தலாம். ஆனால் விலை பேசக் கூடாது! தர்மத்திற்கு விரோதமானது இது. மகேஷ்யோகி பொருளீட்டுவதை எதிர்க்கவில்லை நான். 'மந்திரங்கள் அனைத்துக்கும் நானே மொத்த குத்தகைக்காரன், தியான வழிபாடுகள் அனைத்தையும் தெரிந்தவன் நான் ஒருவன் மட்டுமே' என்று அவர் தம்பட்ட மடித்துக் கொள்வதைத்தான் எதிர்க்கிறேன் நான்.

அந்தரத்தில் மறையவும், சுவரினுள் ஊடுருவவும் என்னால் முடியுமானால் அதற்காக ஐயாயிரம் டாலர்கள் செலுத்த நான் தயார்; இது இயலுமானால், பிறகு எந்த ஒரு வங்கியினுள்ளும் பிறர் காணாது புகுந்து தேவைப்படும் பணத்தை என்னால் எடுத்துச் செல்ல முடியுமல்லவா?

கே.— மனித ஆற்றலுக்கு மேற்பட்ட செய்கைகளும் (Super Human Acts) 'அற்புதங்களும் நடந்த நாட்கள் முடிந்துவிட்டனவே...

ப.— அதைத்தான் வலியுறுத்த முயற்சி செய்து வருகிறேன் நான்...

கே:— நீங்கள் ஒரு இந்தியர். வெளிநாட்டில் இருக்கும் இன்னொரு இந்தியருக்கு எதி

(11-ஆம் பக்கம் பார்க்க)

'புனிதரின்' ஆட்சியில் பெண்கள் கற்பு படும்பாடு!

திருமணமாகாத இளம்பெண் அவள்; காரைக்குடியிலிருந்து பக்கத்துக்கு ஊருக்குப் போகப் பேருந்து நிலயத்திற்கு வந்திருக்கிறாள். வாகனம் எதுவும் கிடைக்கவில்லை. நேரமோ இரவு. ...இருளுக்கும், கற்பைக் களவாட நினைக்கும் மனித மிருகங்களுக்கும் பயந்த அப்பேதைப் பெண் சட்டம்—ஒழுங்கு — அமைதி காக்கும் காவல் நிலையத்தில் அடைக்கலம் புகுந்தாள்; காவலர்களின் கண்காணிப்பில் பத்திரமாக இருந்துவிட்டு விடிந்தவுடன் ஊர் சென்றுவிடலாம் என்ற நம்பிக்கையோடு...... அந்தோ! காவலர்கள் காதகர்களாக மாறி அப்பெண்ணின் கற்பைச் சூறையாடிவிட்டார்கள்!

'தாய்க்குலமே......நாய்க்குலமே......!' என நீலிக்கண்ணீர் வடிக்கும் 'புனிதரின்' ஆட்சியில் இதுவும் நடக்கும்...... இன்னமும் நடக்கும்.

கல்லூரி ஆசிரியர்களின்

போராட்டக்கனல்; சில பொறிகள்

- வீரசோழன் -

அறிவு போதிக்கும் ஆசிரியர்கள் போராடுவது நியாயமா? அதற்கு ஏற்ற தருணம் இதுவா? அவர்களின் போராட்ட வழிமுறைகள் சரியானவையா? இதுபோன்ற ஐயங்கள் ஒவ்வொருவருக்கும் எழுவது இயல்பே! இன்னும் சிலர் ஒருபடி மேலே சென்று கேட்கின்றார்கள். முந்தைய தமிழக அரசிடமே இவ்வாறு முறையிட்டிருக்கக் கூடாதா? இதுபோன்ற வழிமுறைகளை அப்பொழுதே கடைபிடித்திருக்கக் கூடாதா? முந்தைய அரசினை நடத்தியவர்கள் இப்பொழுது ஆசிரியர்களுக்காக வாதாட என்ன நியாயம் உள்ளது? எனவும் சந்தேகம் எழுப்புகிறார்கள்.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களின் ஆசிரியர்களின் தரம் உயர ஒரே சீரான சம்பள விகிதங்கள் வழங்கப்பட வேண்டுமென மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்தது. இதனை நடுவண் அரசு 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29-ஆம் நாள் அன்று பாராளுமன்றத்தில் அறிவித்தது. அதன் பரிந்துரைப்படி இச் சம்பள விகிதங்கள் 1—1—73 முதல் அமுலுக்கு வந்ததாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இதில் குறைந்த அடிப்படைச்சம்பளமாக ரூபாய் 700-ம் அதிகபட்சமாக ரூ. 1900மும் விளக்குநர். உதவிப் பேராசிரியர், என்ற வேறுபாடுகளின்றி தொடர் சம்பள விகிதமாக பரிந்துரைக்கப்பட்டது. இவ்விகிதங்களை மாற்றக் கூடாது எனவும், இவற்றைப் பரிசீலித்து வழங்கும் உரிமையினை மாநிலங்களிடம் விடுவதெனவும் வழங்குவதாயின் 5 ஆண்டுகளுக்குள் (31, மார்ச் 1978) வழங்கப்பட வேண்டுமெனவும்; வழங்கப்பட்டால் அதில் 80% தொகை மத்திய அரசால் 5 ஆண்டுகளுக்கு ஈடுகட்டப்படுமெனவும் பாராளுமன்றத்தில் நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டது.

வழங்கும் உரிமை மாநிலங்களிடம் விடப்பட்ட காரணத்தால் ஒவ்வொரு மாநிலமும் இவற்றை ஆழ்ந்து ஆராயத் தொடங்கின. மகாராஷ்டிரா போன்ற சில மாநிலங்கள் 1975 டிசம்பர் வாக்கில் இப்பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தன. தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் இவற்றை விரைவாகப்பரிசீலித்து வருவதாக அறிவித்தன. ஆனால் இனிய முடிவினை அறிவிக்கு முன்பே 1976 ஜனவரி 31-ஆம் நாள் தமிழகத்தின் ஜனநாயக அரசு சர்வாதிகார அரசால் நியாயமற்ற முறையில் கலைக்கப்பட்டது. இந்நிலையில் சென்ற அரசு ஏன் ஊதிய உயர்வு வழங்கவில்லை என வினவெழுப்புவது எவ்வகையில் சிறப்புடையதாகும்? எந்த ஒரு கட்டத்திலும் இவ்விகிதங்கள் அமுல்படுத்தப்பட மாட்டாது என சென்ற அரசு சொன்னதே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1976 ஆகஸ்ட் 16 அன்று பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் கொடுத்த புள்ளி விபரப்படி 5 மாநிலங்களே (பீகார். மஹாராஷ்டிரா, ஹரியானா, மேற்கு வங்காளம், மேகாலயா) அப்பொழுது வழங்க ஒத்துக்கொண்டிருந்தன. ஆகவே அன்றைய அரசு இதனை அறிவிக்க வருமுன்பே கலைக்கப்பட்டுவிட்ட உண்மையையும். அதனால் அவர்கள் ஆசிரியர்களின் இன்றைய கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்து, அவர்களின் சார்பாக வாதாட மற்ற எவரையும்விடச்சிறிதளவும் குறைந்தவர்கள் அல்லர் என்ற உண்மையையும் உணர வேண்டும்.

ஆசிரியர்கள் போராட ஏற்ற தருணம் இதுதானா என்பது மற்றொருவினாவாகும். இத்தருணம் விட்டால் வேறு எத்தருணம் வாய்க்கும்? இதில் இரு விஷயங்கள் மிக முக்கியமானவை. அவற்றில் ஒன்று காலக்கெடுவாகும். பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதாக அறிவிக்க வேண்டிய காலக்கெடு வரும் 31 ஆம்நாள் மார்ச் மாதத்துடன் முடிவடைகின்றது. இன்னும் 15 நாட்களுக்குள் அறிவிக்கப்பட்டால்தான் செலவுத் தொகையில் 80% நடுவண் அரசால் கொடுக்கப்படும். இல்லையெனில் முழுப் பளுவும் மாநில அரசின் தலையில் விடியும். இதனை எந்த மாநிலம்ஏற்கும்? ஆகவே காலக்கெடு முடிவதற்குள் நல்ல முடிவினைப் பெறுவதற்காகப் போராடும் அவசியம்ஏற்பட்டுள்ளது.

மற்றொரு விஷயம், தற்சமயம் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வு யாருக்கும் திருப்தி அளிக்கவில்லை என்பதாகும். தற்போதைய தமிழக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுலுச்கு வந்ததாகக் கூறப்படும் ஊதிய உயர்வு உண்மையிலேயே உயர்வு அல்ல. ஆசிரியர்களில் பெரும்பாலானோர் அதனால் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். என்றேனும் ஒருநாள் முழுமையாக நிறைவேற்றுவார்கள்; நாட்கள் கடந்தாலும் நல்ல முடிவினை அடையலாம் என இதுவரை வாளாவிருந்தார்கள். முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன, ஆசிரியர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் இனியும் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென முட்டாள் ஒருவனால்தான் போதிக்க இயலும். மற்றொரு பேரிடி. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்றாவது ஊதியக் குழுவிலும் கல்லூரி ஆசிரியர்களின் சம்பள உயர்வு பரிசீலிக்கப்படப் போவதில்லை என்பதாகும். ஆகவே இம்முறை தவறின் இனி எம்முறை வாய்க்கும் என அவர்கள் துணிந்து விட்டனர்

பொது மக்களின் முன்பாக கவர்ச்சியாகப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு எனப்பறைசாற்றி விட்டு உண்மையிலேயே அவர்களையும். ஆசிரியர்களையும் ஏமாற்றி விட்டார்கள். அவை கீழ்க்கண்ட விபரங்களால் தெளிவாகும்.

அடிப்படை சம்பளம் 400 லிருந்து 500 ஆகவும் 470 லிருந்து 700 ஆகவும் மாற்றப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டவுடன் ஏதோ ஒரு பெரும் ஊதியஉயர்வு கொடுக்கப்பட்டுவிட்டது போன்ற ஒரு இயல்பற்ற பொய்யான சூழ்நிலை மக்களிடையே பரவிவிட்டது. தற்சமயம் வாங்கி வரும் அகவிலைப்படியில் (D.A) (ரூபாய் 165—00) பெரும் பகுதி இணைக்கப்பட்டே புதிய அடிப்படை சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பழைய அடிப்படை சம்பளத்துடன் வழங்கி வந்த அகவிலைப்படி ரூபாய் 165—00 இனி புதிய அடிப்படை சம்பளத்துடன் வழங்கப் போகும் அகவிலைப்படி ரூபாய் 25—00 மட்டுமே!

உதாரணமாக வருடாந்திர ஊதிய உயர்வாகிய இன்கிரிமெண்ட் ஒவ்வொரு வருடமும் ஜூலை முதல் தேதி கிடைக்கப் பெறும் ஒரு உதவிப் பேராசிரியரின் ஊதியத்தைக் கவனிக்கலாம்.

			தற்போதைய விகிதம்	புதிய விகிதம்
அடிப்படை சம்பளம்	1-4-76	அன்று	625-00	780-00
,,	1-7-76	,,	650-00	780-00
,,	1-7-77	,,	680-00	820-00
அகவிலைப்படி	1-7-77	,,	165-00	25-00
			———	———
ஆக மொத்தம்	,,	,,	845-00	845-00
			———	———

மேற்குறிப்பிட்டவருடைய புதிய சம்பள விகிதத்தில் எந்த விதமான உயர்வும் இல்லை என்பது மட்டுமல்லாமல் இன்னொரு வேடிக்கையும் இருக்கின்றது. இவர் அரசு அலுவலர்களுக்கான குடியிருப்பில் வசிப்பவரானால் தற்போதைய விகிதப்படி கிடைக்கும் மொத்த ரூபாய் 845-ல் 68 ரூபாயினை வாடகையாகச் செலுத்தியப் பிறகு வீட்டிற்கு எடுத்துச் செல்வது ரூ. 777-00. இனிக் கொடுக்கப் போகும் சம்பள உயர்வால் கிடைக்கும் மொத்த ரூபாய் 845-00-ல் வாடகை ரூபாய் 82—00ஐ செலுத்தியது போக எடுத்துச் செல்லப் போவது ரூ 763-00 இதுவரை 777 ரூபாயினை ஊதியமாகப் பெற்றவர் இனி 763—00 ரூபாயினை ஊதியமாகப் பெறப் போவதற்குப் பெயர்தான் ஊதிய உயர்வு! என்னே விந்தை!! சாண் ஏற முழம் சறுக்கிய கதைதான்'!!

கீழ்க்காணும் அட்டவணையில் தமிழகமும், மற்ற மாநிலங்களும் ஒப்பிடப்பட்டுள்ளன இதிலிருந்து அமுலுக்கு வரும் தேதிகளின் வேறுபாடுகளும், அகவிலைப்படியில் காணப்படும் பெருத்த மாறுபாடும் தெளிவாக விளங்கும்.

மாநிலம்.	பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை.	அமுலுக்கு வருவது எந்த தேதி முதல்	ஊதிய ஆதாயம் எந்த தேதி முதல்	அகவிலைப்படி (D. A.)
1. ஆந்திரா	9	1—1—74	1—4—75	ரூ. 303-00
2. டெல்லி	4	1—1—73	1—1—73	ரூ. 303 00
3. இமாச்சலபிரதேசம்	1	1—4—75	1—4—75	ரூ 300-00
4. மராட்டியம்	11	1—1—73	1—1—73	ரூ. 192-00 (பேராசிரியர்) ரூ. 324-00 (விரிவுரையாளர்)
5. ஓரிஸ்ஸா	4	1—1—74	1—1—74	ரூ 180-00
6. உத்திரபிரதேசம்	19	1—1—73	1—1—73	ரூ. 303-00
7. குஜராத்	7	1—1—73	1—1—73	ரூ. 273-00
8. இராஜஸ்தான்	3	1—1—73	1—9—76	ரூ. 303-00
9. அஸ்ஸாம்	3	1—1—73	1—1—73	ரூ. 120-00
10. மேற்கு வங்காளம்	9	1—1—73	1—1—73	ரூ. 124-00
11. கேரளா	4	1—1—73	1—7—73	ரூ. 243-00
12. தமிழ் நாடு	3	1—4—76	1—1—77	ரூ. 25-00

இனியாவது சொல்லுங்கள் ஆசிரியர்களின் போராட்டம் அவசியமற்றதா? தேவையில்லாததா? தெளிவற்றதா? அவசரப்பட்டு, பொறுப்பில்லாமல் நடத்தும் போராட்டமா? இந்நிலையில் இன்னொன்றினையும் தெளிவாக உணர்தல் வேண்டும். ஆசிரியர்கள் தேர்வுகளைப் புறக்கணிக்கும் முடிவு புதிய முடிவும் அல்ல, திடீரென்று செய்த முடிவும் அல்ல. பல சாத்வீகமான போராட்டங்களை பல நிலைகளில் கடைபிடித்தபின் பலனேதும் கிட்டாமையால் இறுதியாக ஆனால் உறுதியாக எடுத்த முடிவாகும்.

ஜூலை மாதம் சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கையில் ஊதிய உயர்வுபற்றி அறிவிக்கப்பட்டது. தெளிவான விளக்கங்களுடன் இது ஆணையாக வெளியிடப்பட்டது செப்டம்பர் திங்களாகும். ஏதோபெரியதாகக்கிடைக்கும் எனக் கனவு கண்டு கொண்டிருந்த ஆசிரியர்களைத் தட்டி எழுப்புவதாக அமைந்திருந்தது அந்த ஆணை. அன்றிலிருந்து இன்று வரை பலவிதமான காந்திய வழியிலான, சாத்வீக முறையிலான போராட்டங்கள் நடத்தப்பட்டு விட்டன. ஆனால் பயன் எதுவும் விளையவில்லை 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல்,' 'பெருங் கடலினில் பெய்த மழை' போலாகிவிட்டன. முதலில்மதுரைப்பல்கலைகழக ஆசிரியர்கள் தேர்வுகளைப் புறக்கணித்தார்கள். விளைவு நூற்றுக்கணக்கானோர், கர்ப்பிணிகள் உட்பட கைதாகி நெடுந்தூரம் எடுத்துச் செல்லப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். மற்றவர்கள் அதனை எதிர்த்து உண்ணாவிரதமிருந்து கறுப்பு பாட்ஜ் அணிந்து தங்களின் ஆதரவினை வெளிப்படுத்தினர்.

அடுத்து 16—12—77அன்று சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒட்டு மொத்த விடுமுறை எடுத்து கோட்டையை நோக்கி ஊர்வலம் சென்று அமைச்சரைச் சந்தித்தனர்.

16—12—77 முதல்பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் கறுப்பு ரிப்பன் அணிந்து கோரிக்கை விடுத்தனர்.

அதன் பின் மூன்று பெரும் சங்கங்கள் இணைந்து ஜனவரி 24-ஆம் தேதி கோரிக்கை நாள் கொண்டாடி. கூட்டமும் போட்டு விளக்கினர். திரும்ப 2—2—78அன்று ஒட்டுமொத்த விடுமுறையை எல்லா சங்கங்களும் (அரசுக் கல்லூரி ஆசிரியர்களைத் தவிர) எடுத்துக் கோரிக்கையினை தெரிவித்தார்கள் அன்று கோட்டைக்குத் திரும்பவும் ஊர்வலம் சென்றனர். திரும்பவும் மார்ச் மாதம் 3, 4 தேதிகளில் பல்கலைக் கழகம் முன்பாக அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களும் ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பினை மேற்கொண்டார்கள்.

மேற்கூறிய அனைத்தும் காந்திய வழியிலானவை. தூய வழியின்பாற்பட்டவை. இவ்வளவுக்குப் பிறகும் அரசினர் மெத்தனமாக இருந்தால் பின் என் செய்வது? ஆகவே இறுதியாக—முன் சொன்னதுபோல் உறுதியாகப் பல்கலைக் கழகத் தேர்வுகளைப் புறக்கணிப்பது என்ற முடிவுக்கு ஆசிரியர்கள் வந்துள்ளார்கள்.

குல்திப் நய்யார் - அன்றும் இன்றும்

சித்தார்த்தன்

"நெருக்கடி நிலைப்பிரகடனத்திற்குப் பிறகு அப்போதைய தலைமை அமைச்சர், 'பத்திரிகைத் துறையில் உள்ள 'ஜாம்பவான்கள்' அனைவருக்கும் என்ன நேர்ந்தது? இதுவரையில் ஒரு ஆட்சேபணையும் இல்லையே…" என்று கூறியதாக நான் கேள்விப்பட்டேன். நான் பெரிய வீரன் அல்ல என்ற போதும் இப்பேச்சு என்னைப் பாதித்தது. ஆகவே அடுத்த நாள் நான் பத்திரிகை அலுவலகங்களுக்குச் சென்று, பத்திரிகைச் சுதந்திரம் மறுக்கப்பட்டதை எதிர்த்து ஆட்சேபிக்குமாறு பத்திரிகையாளர்களை வற்புறுத்தினேன்…நான் (குல்திப் நய்யார்) கைது செய்யப்பட வேண்டும் என்று சிலர் வற்புறுத்துவதாக அப்போது சுக்லா என்னிடம் கூறினர். சில வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடன் எனது விவாதங்கள் பற்றியும் சுக்லா என்னைக் கேட்டார். எங்கள் பக்கம் வந்து விடுங்கள் என்று சுக்லா என்னை வற்புறுத்தினர்.

…அந்தக் கூட்டத்தில் நான் சுக்லாவைக் கடுமையாகக் குறைகூறினேன்.. சுக்லாவின் முறைகளையும் நான் கண்டித்தேன். பத்திரிகைத் தணிக்கை முறை என்ற பெயரில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பதையும் நான் கண்டித்தேன். அக் கூட்டத்தில் நான் பேசிய பேச்சு வெளியாகி விட்டது…'

— ஷா விசாரணையின் முன் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகச் சாட்சியமளித்த குல்திப் நய்யாரின் வாக்குமூலத்தின் சில பகுதிகள்தான் மேலே கூறப்பட்டிருப்பவை. சிறையில் தனக்கேற்பட்ட இன்னல்களையும் கூறுகிறார் அவர்:

"… நிலைமை படுமோசமாக இருந்தது, 'எனது வார்டில் 93 காவல் கைதிகள் இருந்தார்கள். 93 பேருக்கும் மலம் கழிக்கும் இடங்கள் இரண்டே மட்டும் இருந்தன. கைதிகளுக்குப் படுக்கையாக அமைந்திருந்த ஒரு கல்லின் மீதோ அல்லது தரையின் மீதோ முதலில் சில நாட்களுக்கு நான் படுத்துத் தூங்கினேன். பிறகு ஒரு கட்டில் தரப்பட்டது. ஆனால் அது மிகவும் சிறியதாக இருந்தது…எல்லா இடங்களிலும் ஆயிரக்கணக்கான கொசுக்களும், ஈக்களும் இருந்தன- "பறவைகள்" என்ற படத்தை அவை எனக்கு நினைவு படுத்தின [திகிலூட்டும் படங்களை எடுப்பதில் வல்லவரான ஆல்பிரட் ஹிட்சாக்கின் தயாரிப்பு 'பறவைகள் Birds. சின்னஞ் சிறு பறவைகள் ஒன்று சேர்ந்து மனிதரைக் கொத்திக் கொத்தியே சாகடிப்பதைக் காட்டும் மயிர்க் கூச்செறியும் படம் அது)—.."

—பத்திரிகைத் தணிக்கையை எதிர்த்த ஒரே காரணத்திற்காக குல்திப் நய்யார் இந்த விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தால், இந்திராவின் அனைத்து சர்வாதிகாரத்தனமான நடவடிக்கைகளையும் எதிர்த்ததற்காகத் தி. மு. க. வினர் என்னென்னவிளைவுகளையெல்லாம் எதிர்கொண்டிருப்பார்கள்? அவைகள் அனைத்தும் அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிந்திருந்தால் 'பொய்ச் செய்திகளின்' மொத்தக் குத்தகைக்காரரான பிழைக்கும் எழுத்தாளர் பாணியில் 'சர்க்காரியா விசாரணை' குறித்து அவசரப்பட்ட கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்க மாட்டார்.

"என்னைச் சித்திரவதை செய்யவில்லை" என்று குல்திப் நய்யார் கூறுகிறார். காரணம்; பிரபலமான பத்திரிகையாளர் அவர் என்பதால்!

ஆனால் இருண்டகாலத்தின் போது சிறைச்சாலைகளில் எம் மாதிரியான சித்திரவதைகளெல்லாம் ஈவிரக்கமற்று நடத்தப்பட்டன தெரியுமா? அவரே கூறுகிறார்:

"—இந்தக் கொடுமைகள் பலதரப்பட்டவையாக இருந்தன; பூட்ஸ் கால்களால் திறந்த மார்பின் மீது உதைப்பது; குதிகால்களில் கடுமையாக அடிப்பது; கால் எலும்புகளின் மீது கனமான போலீஸ் தடியை உருட்டுவது (அந்தத் தடியின் மீது ஒரு கான்ஸ்டபிள் உட்கார்ந்திருப்பார்) ஒரே நிலையில் குனிந்தவாறு மணிக்கணக்கில் இருக்கச் செய்வது; முதுகெலும்பில் அடிப்பது; நினைவு தவறும் வரை காதுகளில் ஓங்கி அடித்துக்கொண்டே இருப்பது; துப்பாக்கிகளின் பட்டையான மறுமுனையில் அடிப்பது; உடலின் துவாரங்களில் மின்சாரம் பாயும் கம்பிகளைச் செருகுவது; நிர்வாணமாக்கி ஐஸ்கட்டிகளின் மீது படுக்க வைப்பது; மெழுகுவத்தி அல்லது சிகரட் முனையைக் கொண்டு சருமத்தைச் சுடுவது; உணவு—தூக்கம்—தண்ணீர்— இவற்றை மறுப்பது; தன்னுடைய சிறுநீரையே குடிக்கச் செய்வது; கைகளை பின்னே கட்டி அந்தரத்தில் விமானத்தைபோல தொங்க விடுவது."

[ஜட்ஜ்மெண்ட்]

—இம்மாதிரியான சித்திரவதைகளை நினைத்துப் பயந்தவர்கள்—ஆசை வார்த்தைகளுக்குப் பலியானவர்கள்—அதிகாரிகளின் மிரட்டல்களுக்குச் செவி சாய்த்தவர்கள் — அரசியலில் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் —ஆகியோர் பங்கேற்ற ஒரு நாடகம்தான் 'சர்க்காரியா விசாரணை' என்பதை, இருண்ட காலத்தின்போது இந்திராவின் 'செல்லப் பிள்ளையாக' இருந்த 'பிழைக்கும்பத்திரிகையாளர்' ஏடு ஒத்துக்கொள்ளாமல் இருப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தீர்ப்பு (ஜட்ஜ்மெண்ட்) வழங்கிய குல்திப்நய்யார் ஒத்துக்கொள்ள மறுப்பது தான் வியப்பளிக்கிறது!

இந்திராவின் 'ஏஜண்டுகளாக' செயலாற்றிய கல்யாணசுந்தரம், எம். ஜி. ஆர். 'கோஷ்டி'யின் கற்பனைக் குற்றச்சாட்டுக்களை 'கரு' (தீம்) வாகக் கொண்டு, இந்திராவின் எடுபிடிகளாகப் பணியாற்றிய புலனாய்வுத்துறையினரின் ஒத்துழைப்போடு ஏற்கனவே திட்டமிட்டு ஒத்திகை பார்க்கப்பட்டு, இறுதியில் இந்திராவின் ஏவுதலின் படி அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம்தானே 'சர்க்காரியா விசாரணை'!

'ஊழல் மலிந்துவிட்டதாலேயே தி. மு. க. அமைச்சரவையை நீக்கினேம்' என்ற இந்திராவின் குற்றச்சாட்டுப்பச்சைப் பொய் என்பதை அப்போது கூறினரே குல்திப் நாயார்:

" மிசாவை விரிவுபடுத்தி அதில் சில திருத்தங்களையும் கொண்டுவந்தது தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த சூழ்நிலையைச் சமாளிப்பதற்கென்றே தோன்றியது சனவரி முடிவில் கருணாநிதியின் அமைச்சரவை டிஸ்மிஸ் செய்யப்பட்டது. ஆளுனரின் அறிக்கை உள்துறை அமைச்சகத்தில் தயாரிக்கப்பட்டு, ஆளுநர் கே. கே. ஷா கடமையுணர்வோடு அதில் கையெழுத்திட்டார், நெருக்கடி நிலை அதிகாரங்களைத் தவறான முறையில் பயன்படுத்தியது, பரவலான ஊழலை அனுமதித்தது, பிரிவினை வாதம் போன்ற குற்றச்சாட்டுக்கள் அந்த அறிக்கையில் காணப்பட்டன திரு. ஆர். எஸ். சர்க்காரியாவின் கீழ் ஒரு விசாரணைக் கமிஷனையும் புதுடில்லி நியமித்தது.

தங்கள் வழிக்கு வரமறுத்த கருணாநிதியைத் தண்டிக்க வேண்டாமா'?

[ஜட்ஜ்மெண்ட்]

'தங்கள்வழிக்கு வரமறுத்த கருணாநிதியைத் தண்டிக்கவே சர்க்காரியா விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது' என்று அழுத்தந்திருத்தமாக அன்று கூறியதை மறந்து இன்று ஏனோ 'அவதூறுச் சேற்றை' அள்ளி வீசுவதில் மகிழ்வடைகிறார் குல்திப் நய்யார்.

தி. மு. க. அரசை நீக்கிய பிறகு சென்னைக் கடற்கரையில் பேசிய இந்திரா, 'ஊழலின் காரணமாகவே தி. மு க. அரசு நீக்கப்பட்டது' என்றார். அதே இந்திரா அண்மையில் (பிப்ரவரி24-ஆம் தேதி) திருச்சியில் நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கையில் "தி.மு, க. அரசின் பதவிக் காலம் முடிவடையும் கட்டத்தில் இருப்பதாக உள்நாட்டு இலாகா அதிகாரிகள் அப்போதுகூறியதாலேயே தி. மு. க. அரசு நீக்கப்பட்டது" என்று சொல்லியுள்ளார்.

- ஆக அவர் வாதப்படியே ஊழல் குற்றச்சாட்டு அடிபட்டுப் போகிறது. ஒரு செலாவணியாகாத செல்லாக் காசைப் போன்ற 'ஊழல் குற்றச் சாட்டை' மீண்டும் செலாவணியாக்கப் பார்க்கும் வீண் வேலை நய்யாருக்கு ஏனோ?

சடந்து போனவைகளை குல்திப் நய்யாருக்கு நினைவூட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டே இரண்டு மாநிலங்கள்தான் நெருக்கடி நிலையை எதிர்த்து இந்தியாவில் குரல் கொடுத்தன ஒன்று தமிழகம், மற்றொன்று குஜராத்!

'இருபது அம்சத் திட்டங்கள் என்றபெயரால் இந்திராவின் பெயரும் அவருடைய 'திருக்குமாரரான' சஞ்சயின் பெயரும் அன்றாடம் துதி பாடப்பட்டுக் கொண்டிருந்த போது,"இருபதம்சத் திட்டங்களில் பெரும்பான்மையானவற்றை ஏற்கனவே செயல் படுத்தியாகிவிட்டது" என்று துணிந்துசொன்ன ஒரே அரசு தி,மு.க, அரசுதான்!

"தமிழ்நாடு சொன்னபதில் வேறு விதமாக இருந்தது. இருபது அம்சங்களில் பெரும்பாலானவற்றை அது ஏற்கனவே நிறைவேற்றியாகி விட்டது! இதர மாநிலங்களில் சிலவும் இவ்வாறே கூறின. ஆனால் தி. மு. க ஆட்சி நடத்தும் தமிழ் நாட்டிலிருந்து இப்படி ஒரு பதில் வரலாமா? இந்திராவின் அரசுக்கெதிராகக் கூறப்பட்ட துடுக்குத்தனமான சொல். அல்லவா அது!-"

(ஜட்ஜ்மெண்ட்)

- இவ்வாறு அன்று கூறிய குல்திப் நய்யாருக்குத் தெரியாதா,- இந்திராவுக்கு ஏற்பட்ட கோபத்தைத் தணித்துக் கொள்ளச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடே 'சர்க்காரியா விசாரணை' என்பது? தெரிந்திருந்தும் ஊசலாடும் உள்ளத்தோடு அவர் திசை மாறுவது ஏனோ?

எம்மாதிரியான சூழ்நிலையில் சர்க்காரியா விசாரணை' அரங்கேற்றப்பட்டது என்றுவது நய்யாருக்குத் தெரியுமா?

காவல்துறை உயர் அதிகாரிகளிலிருந்து புலனாய்வுத் துறை அதிகாரிகள் அனைவரும் இந்திராவின் 'வீட்டு வேலைக்காரர்கள்' ஆக்கப்பட்ட நேரமது; 'மாருதி ஊழல்' குறித்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள்எழுப்பியசந்தேகத்தை உறுதிப்படுத்திக்கொள்ள—விசாரித்து தகவல் சேகரிக்கச் சென்ற புலனாய்வுத்துறை அதிகாரிகள் மிசாவின் கீழ் கைதான கொடுங்கோன்மை கோலோச்சிய காலமது;வேண்டியவர்கள் என்ன குற்றம் இழைத்திருந்தாலும் விட்டுவிட வேண்டும்; வேண்டாதவர்கள் தவறே செய்திராத போதும் ஏதாவது அபாண்டமாகப் பழி சுமத்திச் சிறையில் தள்ள வேண்டும் என்ற கீழ்மைத்தனமான சித்தாந்தம் உலாவந்த துயரமிகு நாட்கள் அது!

இந்திராவுக்கு ஆதரவாக 'ஆமாம்' போடாத அதிகாரிகளின் தலைகளுக்கு மேலே 'கத்திகள்' தொங்கின என்பதை குல்திப்நய்யாரே உறுதி படுத்தியுள்ளார்:

—"1974 மார்ச்சில் டில்லியில் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்த ஜனசங்கம் திட்டமிட்டபோது கைது செய்யப் படவேண்டும் என்று தாம் விரும்பிய தலைவர்களின் பட்டியலை இந்திரா தாமே நேரில் டில்லி போலீஸ் ஐ. ஜி யிடம் கொடுத்திருந்தார். இத்தகைய நடவடிக்கை எடுப்பது அவசியமில்லை என்று அதிகாரிகள் கருதினர்கள். ஆனல்அது இந்திராவின் உத்தரவு. பின்னர் டில்லியின் மேல்நிலை அதிகாரிகளை மாற்றியமைத்தார் இந்திரா. அந்தச் சமயத்தில்தான் தங்களிடம் விசுவாசமாக உள்ள அதிகாரிகளாகப் பார்த்து யூனியன் பிரதேசத்தின் முக்கிய பதவிகளில் சஞ்சயும் தவானும் கொண்டுவந்து வைத்தனர்"

(ஜட்ஜ்மெண்ட்)

இவ்வாறு குல்திப் நய்யார் சொல்வதுபோல் 'கொண்டு வந்து வைக்கப்பட்டவர்கள் தானே' அன்றைய ஆளுநரான சுகாதியா—அவருடைய ஆலோசகர்களான தவே, ஆர். வி. சுப்பிரமணியம், செய்தித் துறை இயக்குநரான கிருஷ்ண மூர்த்தி, தணிக்கை அதிகாரி வெங்கட்ராமன் போன்றோர்.

எம்மாதிரியான நெருக்கடி வந்திருந்தால், தி மு.க. அரசை

(10-ஆம் பக்கம் பார்க்க)

அரிய வாய்ப்பு, குறுகிய சந்தர்ப்பம்!

எங்களது தவணைமுறை
திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்!

எம். கே. டிரேடர்ஸ்,

41, ரங்கராஜபுரம் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.

—: கிளை :—

50, ஏரிக்கரைத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

எங்களிடம் ரேடியோ, டிரான்சிஸ்டர், ஸ்டீல்பீரோ, சைக்கிள் சோபா, மின்விசிறி மற்றும் வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும் ரொக்கத்திற்கும் தவணை முறையிலும் கிடைக்கும்.

உரிமையாளர் :— O. Y. A. முகமது மைதீன்.

'ரா(RAW)'வின் கதை!

1967ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தல்களின்போது காங்கிரசுக்குப் பெரும்பான்மையான இடங்களில் ஏற்பட்ட சரிவைக் கண்டு இந்திரா கலங்கினர்; எதிர்காலத்தில் இன்னும் மோசமான சரிவுகள் ஏற்படாமல் இருக்கவும், தொடர்ந்து இந்தியாவில் 'இந்திரா சாம்ராஜ்யம்' நீடித்திருப்பதற்கும் வழி என்ன என்பது குறித்து அவர் இரவு பகல் இடைவிடாது சிந்தித்தார்.

தமது 'அன்பிற்கும்', 'நம்பிக்கைக்கும்' ஆளாகியிருந்த அந்தரங்க ஆலோசகர்களான பரமேஸ்வர் நாராயண ஹஸ்கர், பிரிதிவிநாத் தார், பி. கே. நேரு, துர்கா பிரசாத் தார், திரிலோகிநாத் கௌல் ஆகியோருடன் டில்லியிலிருக்கும் 'சென்ட்ரல் செக்ரடேரியட்'டின் தெற்குப் பகுதியில் ஆலோசனை செய்தார் இந்திரா.

இந்திராவின் 'பீடம்' என்றுமே ஆட்டம் காணமல் இருக்கவும் — அவருடைய அரசியல் எதிரிகளை 'இருக்கின்ற இடம் தெரியாமல் ஆக்கவும்' எல்லாவற்றிற்கும் மேலான, அனைத்தையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு புலனய்வுத்துறை அமைப்பை நிறுவத் தீர்மானம் செய்தார்கள்.

இதன் விளைவாக 'ரா' — 1968ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாள் பிறந்தது.

அதனுடைய தலைவர் 'ரமேஷ்வர் நாத் காவோ' என்பவர். அதற்குமுன் அவர் 'மன்மோகன் லால் ஹுஜா' தலைவராக இருந்த புலனய்வுத் துறையில் (Intelligence Bureau) இணை இயக்குநராக வேலை பார்த்தவர்.

ஹுஜாவைவிட ரமேஷ்வர் 'திறமை' வாய்ந்தவராக இருந்ததால் இருவருக்குமிடையே அடிக்கடி 'மோதல்கள்' ஏற்பட்டன.

'ரா'வின் தலைவரானதும் முதல் வேலையாக ரமேஷ்வர், ஹுஜாவை வேறு இலாகாவுக்குத் 'தூக்கிவிட்டு'த் தன்னுடைய நண்பரும், தனக்கு வேண்டியவருமான 'ஆத்மராம் ஜெயராம்' என்பவரைப் புலனய்வுத் துறையின் இயக்குநராக்கினர்.

ரா (RAW) — ஐ. பி. (I.B.) — எஸ். எஸ். பி. (S.S.B.) — ஏ. ஆர். சி. (A.R.C) — போன்ற அனைத்துப் புலனய்வுத் துறைப் பிரிவுகளும் இந்திராவுக்கு வேண்டாதவர்களைக் 'களை' எடுப்பதிலேயே கவனமாக இருந்தன.

'எஸ்.எஸ்.பி.' (Secret Service Bureau) 'ஏ.ஆர்.சி.' (Air Reconnaissance Centre) 'ரா' - தலைவர்களுடன் அவ்வப்போது ஆலோசனைகள் நடத்துவார் இந்திரா.

'ரா' வெளிநாட்டு விவகாரங்களிலிருந்து தனது கவனத்தைத் திருப்பி உள்நாட்டுக் கட்சிகளையும், தலைவர்களையும், தொண்டர்களையும் நோட்டமிடத் துவங்கியது. ஏற்கனவே, இதே உளவு வேலைகளை 'ஐ.பி.' செய்து கொண்டிருந்த போதும் இந்திராவுக்கு என்னவோ திருப்தி ஏற்படவில்லை. எனவே, இரண்டையுமே இதற்காகச் செயல்பட ஆணையிட்டு, தினமும் அவைகளின் 'கண்டுபிடிப்புகளை'த் தனது பார்வைக்குக் கொண்டுவரச் சொன்னர்.

இருண்ட காலத்தில் 'ரா' புரிந்த கொடுமைகளை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது. அழிவு வேலைகளுக்காக எங்கும் வியாபித்திருந்த சர்வ வல்லமை படைத்த ஒரு பூதமே ''ரா''.

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு-விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
12. அழகர்கோவில் சாலை, 72. C டவுன்ஹால்ரோடு, மதுரை.

நம் நாடு

சந்தா விபரம்

ஓராண்டு சந்தா ரூ. 20.00
ஆறுமாத சந்தா ரூ. 10-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம், சென்னை-600013

குல்திப் நய்யார் ....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வானளாவப் புகழ்ந்த ஷா ஒரே நாளில் 'ஊழல்' அரசு என்று சொல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார். என்பதை நய்யாரால் யூகிக்க இயலுமோ என்னவோ......

'சர்க்காரியா விசாரணை' நாடகத்தைப் பிறர் நம்பும்படியாக நடத்திக் காட்ட அன்றைய ஆளுநர் முதற்கொண்டு அவர் தம் ஆலோசகர்கள், அதிகாரிகள், செய்தித் துறை, வானொலி போன்ற அனைத்துமே முடுக்கிவிடப்பட்டன என்பதை நய்யார் தெரிந்து கொள்ள வேண்டும்.

'விந்தை உலகில் ஆலிஸ்'-கதையில் வருவதுபோல், 'குற்றம் சாட்டுவதும் அவர்களே; வழக்காடுவதும் அவர்களே; இறுதியாகத் தீர்ப்பளிப்பதும் அவர்களே!'' குற்றம் சாட்டியவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய முடியாது; குற்றச் சாட்டுக்களை மறுத்து வாதிட்டால் அது வெளி உலகிற்குத் தெரிய வராது!

இம்மாதிரியான 'சர்க்காரியாவிசாரணை'யை—உண்மையில் ஒரு விசாரணை என்று எப்படித்தான் நய்யார் நம்பிஞரோ...!

இந்திராவுக்கு எதிராக நேருக்கு நேராகவும் தலைமறைவாக இருந்தும் செயல்பட்ட தமிழரல்லாத தலைவர்களின் நடவடிக்கைகளை. ''வீரம் செறிந்த இரண்டாவது விடுதலைப் போராட்டம்'' என வர்ணிப்பதையும். உண்மையில் அந்த ''இரண்டாவது விடுதலைப்போராட்டத்திற்கு'' வித்திட்ட தி. மு. க. வினர்மீது தொடர்ந்து பழி சுமத்தி மகிழ்வதையும் நோக்கும்போது பலருக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. பழைய-மறந்துபோன- ஒரு சந்தேகம்!

மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர் மீதான 'வடவராதிக்கம்' தொடர்ந்து நீடிக்கத்தான் செய்யுமோ என்பதுதான் அந்தச் சந்தேகம்...!

— இல்லாவிட்டால் இருண்ட காலத்தின்போது சர்வாதிகாரத்தை எதிர்த்து முதற் குரல் முழங்கிய கலைஞரை மட்டும் 'தனிமைப்' படுத்தப் பார்ப்பது ஏன்?

குல்திப் நய்யார் போன்றோரின் ஊசலாடும் உள்ளங்கள் அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துகின்றனவே தவிர, மங்கச் செய்ய ஒத்துழைப்பதில்லை. ★

வந்த மடல்

தேர்தலா? தீவாளியா?

அய்யா,

அண்மையில் நடைபெற்ற அசாம் மாநிலத் தேர்தலில் போட்டியிட்ட 938 பேரில் 565 பேர் தங்கள் டெப்பாசிட்டையே (கட்டுப் பணத்தை) இழந்திருக்கிருர்கள். அதாவது, போட்டியிட்டவர்களில் அறுபது சதவீதம் பேர் டெப்பாசிட் இழந்தவர்கள் ஒரு கட்சி அல்லது கொள்கையின் ஆதரவு இல்லாமல் சுயேச்சையாகப் போட்டியிடுவோர் தோற்றுப் போவதும் டெப்பாசிட் இழப்பதும் சாதாரணமாக நடக்கக்கூடியதே. ஆனல் இந்தத் தேர்தலிலே தான் கட்சிகளின் சார்பிலே போட்டியிட்டவர்களும் பெருமளவில் கட்டுக் காசு இழந்தோர் பட்டியலில் சேர்ந்திருக்கிருர்கள்.

இங்கே, இந்திரா காங்கிரசின் சார்பில் போட்டியிட்டவர்கள் 115 பேர்; இவர்களில் 99 பேர் டெப்பாசிட் இழந்திருக்கிருர்கள்.

தேர்தல்களில், சிலபோது எதிர்பாராத தோல்விகள் ஏற்படுவது உண்டு. ஆனல் ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களில் 100-க்குத் 90 பேர், தங்கள் கட்டுக்காசையே இழப்பது என்ருல். இது பொது மக்களின் ஆழ்ந்த கவனத்துக்கு உரியது. இதைப் பார்க்கிறபோது, இவர்கள் மக்களிடையே தங்களுக்கு உள்ள ஆதரவைக் கணக்கில் கொண்டு போட்டியிட்டதாகத் தெரியவில்லை; சும்மா, பேர் பண்ணுவதற்காக அல்லது தங்கள் கையிருப்பில் உள்ள பணத்தை ''தீபாவளி'' பண்ணுவதற்காகவே இவர்கள் நின்ருர்கள் என்று தெரிகிறது

ஒரு தொகுதியில்போட்டியிடுவதற்கு முன்னல், அங்கே தங்கள் கட்சிக்குஎந்தஅளவு ஆதரவு உள்ளது என்று மதிப்பிட வேண்டும்; அந்தத் தொகுதியில் உள்ள மக்களின் நலனுக்குந் தங்கள் கட்சிக்கும் தொடர்பு இல்லை என்ருல். மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்து ஒதுங்கிவிட வேண்டும். இதுதான், நாம் கட்டிக்காக்க விரும்பும் குடியாட்சி முறைக்கு ஒவ்வொரு கட்சியும் வைக்க வேண்டிய மதிப்பு.

அதைவிடுத்து வீம்புக்காகப் போட்டியிட்டுக் கட்டுக்காசை இழப்பது மக்களையே அவமதிப்பதாகும். இப்படிப்பட்ட பொறுப்பற்ற செயல்கள் தொடர்ந்தால், நாளை அந்தத் தொகுதிமக்கள், தேர்தல்நாளில் இவர்களுக்குக் கொடும்பாவி கட்டி இழுக்கத் தொடங்கிவிட்டால் என்ன செய்வது? தானக ஒதுங்கிப் போகாத பிராணியைத் தடிகொண்டு அடித்துத்தானே விலக்க வேண்டியுள்ளது?

கட்டுப்பாடு என்றும் ஒழுக்கம் என்றும், அரசியல்வாதிகள் மேடைபோட்டு முழக்குகிருர்கள்; குடியாட்சி அமைப்பிலே மக்களை மதிக்க வேண்டியது தங்கள் அடிப்படையான கடமை என்பதை இவர்கள் உணர வேண்டாமா? வீம்புக்குப் போட்டியிட்டு, மொத்தம் மொத்தமாக டெப்பாசிட் இழக்கும் பொறுபபற்ற நடைமுறை தொடருமானல், குடியாட்சி அமைப்பிலே மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்!

சாலை இளந்திரையன்.
புதுடில்லி

ஃ ஃ ஃ ஃ

அய்யா அஞ்சல்தலையும் வானொலியும்

அய்யா அவர்களின் நூருவது பிறந்த நாளன்று அவர் நினைவாக ஓர் அஞ்சல் தலை வெளியிட நடுவணரசு தீர்மானம் செய்துள்ளதென நடுவணரசின் அஞ்சல்துறை அமைச்சர் அறிவித்து உள்ளது தன்மானத் தமிழர்களான நமக்கு மிக்க மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. அஞ்சல்தலை குறித்த சில யோசனைகளை 'நம்நாடு' வாயிலாக நடுவணரசு அஞ்சல்துறைக்குக் கூறுவோமாக;

முதலில் அய்யா உருவம் கொண்ட அஞ்சல்தலை ஏழை எளியோரும் வாங்கக்கூடிய வகையினில் 25 காசு அஞ்சல்தலையாக இருந்திடல் வேண்டும்.

இரண்டாவதாக அய்யா இறுதி வரை சாதியினையும், சாதிக் கொடுமைகளையும் கடுமையாக எதிர்த்தவர். ஆகவே அஞ்சல் தலையினில் பெரியார் ஈ. வெ. ராமசுவாமி' என்றுதான் இருக்க வேண்டுமே ஒழிய 'பெரியார் ஈ. வெ. ராமசுவாமி நாயக்கர்' என்று இருக்கக் கூடாது. இப்படி சாதி பட்டத்தினை சேர்த்து அய்யா நினைவு அஞ்சல் தலை வெளியிடுவது அய்யாவை அவமானப்படுத்துவதுபோல ஆகும்.

மூன்ருவது. அய்யா உயிர்மூச்சு உடலை விட்டுப் பிரியும்வரை இந்தியினை எதிர்த்தவர். ஆகவே, அய்யா நினைவு அஞ்சல் தலையினில் இந்தியைத் தவிர்த்திட முயலவேண்டும். முடியாவிடில் தமிழ் இடம் பெறவேண்டும்,

மேலும், அகில இந்திய வானொலி மற்றும் தொலைக் காட்சிகளில் தலைவர்களின் பெயர்களைக் கூறும்பொழுது சாதிப் பட்டத்தினை சேர்தது கூறுவதில்லை. ஆனல் அய்யாவின் பெயரினைக் கூறும்போது மட்டும் சாதியினைச் சேர்த்தே கூறப்படுகின்றது. ஏனிந்த நிலைமை? அய்யாவை அவமானப்படுத்த அஞ்சல் துறை கடைப்பிடிக்கும் வழிகளில் இதுவும் ஒன்ரு? வானெலி, தொலைக்காட்சிகள் திருந்திவிடும் என்று நினைக்கின்ருேம். இல்லாவிடில் திருந்த வைப்போம்.

காரைக்குடி பால்ராசு'

(அய்யா அஞ்சல்தலை வெளியிடும் முடிவு இப்போது மறுபரிசிலனையில் உள்ளதாம்.)

எட்டுத்திக்கிலும்..!

ஜாம்பியா தலைமை அமைச்சரின் 'அத்துமீறல்'!

ஜாம்பியாவின் தலைமை அமைச்சரான மெய்ன்ஸ் சோனு, இலண்டனிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் என்ற பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினர்.

அக் கடிதத்தில் இந்திரா காந்தி இன்றைய இந்திய அரசால் கொடுமைப்படுத்தப் படுவதாகக் கயிறு திரித்திருந்தார். பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் அவரது அத்துமீறலைக் கண்டித்து இந்திய அரசு தனது ஆட்சேபணையைத் தெரிவித்தது.

அப்படிக் குறிப்பிட்டதற்காகப் பிறகு வருத்தம் தெரிவித்த மெய்ன்ஸ் சோனு, தான் வெளியிட்ட கருத்து ஜாம்பியா அரசின் கருத்தோ அல்லது அதிபரின் கருத்தோ அல்லவென்று சமாதானம் கூறியுள்ளார்.

கூட்டுசேரா நாடுகளின் கொள்கை வெற்றி!

கூட்டு சேரா நாடுகளின் இயக்கத்தின்மீது வல்லரசுகளின் கவனம் இப்போது திரும்பி வருகிறது. சமாதானத்தை நிலவச் செய்யவும், உலகத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும், அகில உலக அரசியலரங்கில் ஏற்பட்டு வரும் குழப்பத்தைத் தீர்க்கவும் கூட்டுச்சேரா நாடுகளின் இயக்கம் ஆக்கபூர்வமான பணியாற்றும் என்ற நம்பிக்கை அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் தோன்றியுள்ளது.

விண்ணையும் வெற்றிகாணும் வீரர்கள்!

விண்ணை வெற்றி காண்பதில் முதலிடம் பெறப் போவது யார்? என்ற போட்டி சோவியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்று வருகிறது- அழிவுக் கதிர்களையும் அணுகுண்டுகளையும் தயாரிக்காமல் இம்மாதிரியான மனிதகுலத்திற்கு ஆக்கபூர்வமாக உதவக்கூடிய 'போட்டி' வரவேற்கத் தக்கதே.

சயூஸ் - 28' என்ற கலத்திலேறி இரு விண்வெளி வீரர்கள் வான வெளியில் எட்டு நாட்கள் ஆய்வு செய்த பிறகு வெற்றிகரமாக மண்ணுலகிற்குத் திரும்பியுள்ளார்கள், ஒருவர் சோவியத் வீரரான அலெக்சி குபரேவ்; இன்னொருவர் செக்கோஸ்லாவேகிய வீரரான விளாதிமிர் ரெமிக்.

அமெரிக்காவையோ, சோவியத்தையோ சாராத பிறநாட்டார் விண்வெளி சென்று திரும்புவது இதுவே முதன் முறையாகும்!

பாகிஸ்தானுக்குச் செல்லும் இந்திய மது

கடந்த ஆண்டு பொதுத் தேர்தல்கள் பாகிஸ்தானில் நடப்பதற்கு முன் அன்றைய அதிபராக இருந்த பூட்டோ மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தார்.

இப்போது இந்தியாவிலிருந்து கடத்திக் கொண்டு வரப்படும் மதுபானங்களை, எவ்வளவு உயர்ந்த விலையாக இருந்தாலும்-கொடுத்து வாங்குவதற்கு பாகிஸ்தானில் பெரும் புள்ளிகள் தயாராக இருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் மதுவிலக்கு அமுலில் இல்லாத போது 'பிளாக்நைட்' என்ற மதுபானத்தின் விலை-பாட்டில் ஐம்பது ரூபாய். இப்போது கறுப்பில் அதே பாட்டில் விலை இருநூறு ரூபாயிலிருந்து இருநூற்று ஐம்பது ரூபாய்வரை உயர்ந்து விட்டதாம். கடத்தப்பட்டு வரும் 'ஸ்காட்ச்' என்ற மதுபானத்தின் விலை: பாட்டில் முந்நூற்று ஐம்பது ரூபாய்!

நாளொன்றுக்கு 20,000 க்கும் மேற்பட்ட 'விஸ்கி பாட்டில்கள் பல விதங்களில் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குக் கடத்தப்படுகின்றன.

(Continued from Page : 12)

State Government files cases in the Court.

It is reported that the Commission "has gone beyond the charge-sheet to look into related matters."

What an interest for Justice Sarkaria? Has he enquired about them or heard about them? Have they been brought to light in enquiry? What bonafide persons have been examined?

One Mr. Rajagopal of Uppiliapuram had deposed before the Commission that he was not a member of the AIADMK. But he was admitted into the AIADMK in the presence of MGR. It was then published in the AIADMK daily. We have submitted this fact to the Commission enclosing the clippings from the daily. But however Sarkaria relies on Rajagopalans evidence for his findings. Will this not be enough to prove that under circumstances the report was finalised.

It is also reported in the Goenka daily that "Justice Sarkaria has found that currency notes worth Rs. 26.5 lakhs were changed at a bank one evening."

In which bank?

Who did change the Currency?

Whose Currencies were they?

The *Indian Express* and the *Dinamani* have not reported these facts. Perhaps Justice Sarkaria will announce them. Otherwise the charge may be filed in the Court of law. Then it will be published. It is rather a surprise that how the Goenka group has come to know that Justice Sarkaria has recorded his findings in this allegation which is well beyond the 28 allegations referred to him. Will not this also be brought to the Court? Let it be brought'. We will certainly expose this blatant lie.

Thousand rupee currency notes were changed at a bank in Madras at the time of Parliamentary Elections. What happened to this allegation? Why silence is observed in this charge alone? The time of exposure of this affair will certainly come shortly.

"The offerings at many temples in the State were finding their way to the Coffers of the DMK men."

It is told that Justice Sarkaria has also recorded this. The extra-ordinary people Goenka and Kuldip Nayar report so.

In what temple?

Which persons have misappropriated the offerings?

Now these 'experts' are not able to get the details. Details may see the light in course of time. Exposition may be got in the court. We are sure, to meet.

We are not cowards to bargain with principles, to bend and bow down just to bad any type of life.

This the lanty and autocratic people must realise.

We have met several ordeals successfully. We will not be afraid to some more ordeals.

Whether it is the Chapter of allegations or the Chapter of Commission it is not a concluded Chapter. Only it will be a story to be continued.

It is going to rotate alternately Sarkaria Commission in the past; Shah Commission in the present, Naidu Commission in the present; Next Commission when?

MU. KA.

Translation of the article written by Dr. M. Karunanidhi, the former Chief Minister of Tamil Nadu in the Tamil Daily *Murasoli* dated 10-3-'78.

சித்தர்கள் அல்லர்; எத்தர்களே !

(7—ம் பக்கத் தொடர்ச்சி)

ராக 'சவால்' விடுகிறீர்களே...

ப !— மகேஷ் யோகி போன்றவர்களை 'அடையாளம்' காட்டாவிட்டால் எல்லா யோகிகளும் அயோக்கியர்களே என்று மக்கள் முடிவு கட்டி விடுவார்கள்...

கே :— மகேஷ் யோகி குறித்து மொரார்ஜி தேசாயோடு விவாதிப்பீர்களா?

ப :— மகேஷ் யோகி, சாயி பாபா இருவரைப் பற்றியும் விவாதிப்பேன்,

கே :— அவரோடு எதைப் பற்றி விவாதிப்பீர்கள்?

ப :— சாயிபாபா தன்னுடைய சில்லறைத்தனமான 'அற்புதங்களால்' பெருந்திங்கு இழைத்து வருகிறார். யாராவது அவர் மீது நடவடிக்கை எடுக்காது போனால்...

கே :— இப்போது சாயிபாபா கைக்கடிகாரங்கள் வரவழைப்பதை நிறுத்தி விட்டாரே...

ப .— நிறுவனத்தின் பெயரும் வரிசை எண்களும் கைகடிகாரங்களில் காணப்படுவதால் நிறுத்திவிட்டார். அவர் வரவழைக்கும் 'புனித விபூதி' யில் மட்டும் பெயர் இல்லை... மக்களை ஏமாற்றும் போலி ஆன்மீக வாதிகள் இவர்கள்:

கே :— சாயிபாபா 'உயர் வட்டாரத்தோடு' நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளாரே...

ப :— அவரை ஆதரிப்பவர்கள் 'ஆன்மீக வாதிகள்' அல்லர். தனக்கு விளம்பரம் தேடிக் கொள்ள எப்படி மகேஷ் யோகி திரைப்பட நட்சத்திரங்களின் பெயர்களைப் பயன்படுத்துகிறாரோ அதே போல் விளம்பரத்திற்காக சாயிபாபா பெரிய மனிதர்களின் பெயரைப் பயன்படுத்துகிறார்.

கே :— நீங்களும் ஏன் 'பெரிய' பெயர்களைப் பயன்படுத்தக் கூடாது?

ப :— புகைப்பதை-குடிப்பதை நிறுத்துவதுஎப்படி—சுவாசிப்பது எப்படி போன்ற சிறிய விஷயங்களைக் கற்றுத்தர பெரிய பெயர்களை இழுக்க நான் விரும்பவில்லை. பசித்தவனுக்கு உணவுண்ணத் தெரியும்.

கே :— பலரின் கவனத்தைக் கவர்ந்த இன்னொரு யோகி நம்மிடையே இருக்கிறாரே-பதினேழு வயதேயான பால யோகி!

ப :— ஆம். இருந்தார்; இப்போது 'வீழ்ச்சி' அடைந்து விட்டார்! 'விளையாட்டுப் பையனை' அவர் திருமணம் செய்து கொண்டார். எல்லோரையும் போலவே அவரும் ஏராளமாகப் பணம் சேர்த்து விட்டார்.

கே :— இப்போது வாழ்க்கையை ஓட்ட அவர் என்ன செய்கிறார்?

ப: அவரிடம் ஏராளமான பணம் இருக்கிறது. இலத்தின் அமெரிக்காவிலே அவர் குடியேறிவிட்டார்; மனிதகுலத்திற்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதே இவர் போன்றோர்தாம்! யோகிகள் மீது மக்களுக்கிருக்கும் 'மாயை' அகன்று வருகிறது மகேஷ்யோகியைப் போலவே இந்தப் பையனும் (பால யோகி) கெட்ட பெயரை ஏற்படுத்திவிட்டான்.

கே: சொர்க்கம் என்று சொல்கிறார்களே அப்படி ஒருஇடம் இருக்கிறதா?

ப: சொர்க்கமும். நரகமும் நமக்குள்ளேதான் இருக்கின்றன.

(பேட்டியின் பகுதிகள் 11—2—'78 தேதிய 'கரண்ட்' ஆங்கில இதழில் எடுக்கப்பட்டது)

பாவம், பள்ளிச் சிறுமி!

பதினோராண்டு காலமாகத் தலைமை அமைச்சராக இருந்த போதும் இந்திரா ஒரு 'பள்ளிச் சிறுமி'யாகவே இருக்கிறார்.

—சனதா கட்சித் தலைவர் சந்திரசேகர்

(சண்டே : 5. மார்ர் '78.)

பொப்பிலி அரசர் மறைவு!

பழம்பெரும் நீதிக்கட்சித் தலைவர்களில்ஒருவரும் முன்னாள் சென்னை மாகாண முதலமைச்சருமான பொப்பிலி அரசர் (ஆர்.ஆர்.எஸ். ஆர். ரங்கா ராவ்) தமது 77-வது வயதில் பொப்பிலியிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்திய செய்தியை துயருடன் அறிவிக்கிறோம்.

உதயசூரியன் மோதிரம்

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல்லாயிரக் கணக்கான இயக்க தோழர்களின் கரங்களில் கம்பீரமாக திகழ்ந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும், தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள் மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தயாரித்து வாழ்க கலைஞர் என்று பொறித்து தருகிறோம்.
ஒரு மோதிரம் விலை ரூ. 15.00
தபால் செலவு 3.50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3.00 அட்வான்சுடன் அனுப்பினால் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு.
பட்டாபிராம், சென்னை-600072

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் மோதிரத்தை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டோ வினஸ்,
104, C. N. K. ரோட் - சென்னை-5.
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

Nayar in a Crisis

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

BY
Dr. M. KARUNANIDHI

Beloved Brother,

Kuldip Nayar, the celebrated journalist used to write articles in news papers and publish books with shocking facts as detective stories. During emergency he was, for some time, put in prison and then, under some shady circumstances got himself released.

All of a sudden, assuming the role of an yellow journalist, he has reported in the *Indian Express* some facts supposed to have been found in the report of the Sarkaria Commission much in advance of its publication.

He has written the news article in the front page of the *Indian Express* with the uncertain terms such as "it is known,"—"it is learnt".

I have already written about the stunning news which he had referred to, in another article. Hence, for the present, I wish to confine myself to remind you of the purpose of the constitution of the Sarkaria Commission, its adoption of the procedures and the evolution of its rules and regulations.

The very same Kuldip Nayar had published a book called 'Judgement'. In it the atrocities during emergency have been recorded page after page.

He had not in the least hesitated to compare the methods adopted by Mrs. Gandhi to suppress and subdue the opposition parties with Adolf Hitler's methods of terrorism.

The laws were prostrated before the feet of Mrs. Gandhi. The Courts of Justice and the Justices of the Courts were coerced to be at her beck and call. The DMK Government and the Gujarat Congress Government were outrageously toppled down for the simple reason that they had lifted the banner of [illegible]tion aloft against the declaration of emergency. We can find all these facts elaborately described in that book.

During the 'Reign of Terror'—during that 'Dark Age' the Sarkaria Commission was constituted against the former Ministers of the DMK Government. The bureaucrats prepared the affidavits, type-written them and obtained the signatures of the witnesses using coercion and intimidation. Under the then prevailing circumstances the views placed on behalf the DMK could not be published in the press. Cross-examination of the memorialists was not allowed. Our valid objections were overruled and our prayers and pleas turned down. The witnesses were tutored ones; depositions were cooked-up and evidences fabricated by the bureaucrats and the then Advisors to the Governor. It is arranged to prepare the Commissions report on this basis only. Mouths were muzzled and the hands chained. This was the fate and lot of the opposition parties. Under these circumstances and under the pressure of such various other circumstances Justice Sarkaria had staged the 'drama of his enquiry' in 'Kanjee' mansion in Madras.

Justice Sarkaria started his enquiry when emergency was in existence and continued it for some time even after its revocation. He began his enquiry under authoritarian circumstances and proceeded on the same direction without taking any turn and completed his report.

This is how the report was born. Even before the publication of the report Kuldip Nayar has written a news article in the *Indian Express* about some findings of the Commission. Is not it a mystery?

The case against Goenka, the threat against him, the case against George Fernandes and Pat el and the enquiry—all these, Kuldip Nayar argues, took place because they opposed Mrs. Gandhi's attitude and approach. But he expresses the views that the enquiry by Sarkaria Commission is just and its report fair. What crisis has been caused to him to hold that this enquiry alone is just and fair.

We have entertained the impression that emergency had been revoked. Alas! for Kuldip Nayar emergency still continues. How is it, my beloved brother? Better I leave it for your guess.

—MU. KA.

Translation of the Article written by Dr. M. Karunanidhi, the former Chief Minister of Tamil Nadu and published in the Tamil Weekly *Nam Nadu* on 12-3-78. L. G.

Beloved Brother,

"Pot called the kettle black". "What a bad odour?" scowled the cremation ground at the garden of fragrant flowers." You are good for nothing sewage" laughed the latrine at the sweet tender coconut milk.

Now-a-days such funs and frolics are taking place in our country. Not contented with writing about political freedom and freedom of press and forgetting the sanctity of their sanctum — sanctorum the Dailies of Goenka have started preaching holiness.

It has always been a sport and past-time for those Dailies to smear and sling mud at the DMK knowing that there are fifth columnists who revel at it they indulge in festive merry-making.

The final report of the Sarkaria Commission is to be shortly published. It is claimed that some part of the unpublished report has, somehow, come to the knowledge of these 'saints'. These cater-pillars who thrive on exploiting others enjoy themselves in publishing them in eight columns in front Page of their Dailies *Indian Express* and *Dinamani*.

"Please be merciful and treat the patient immediately. Otherwise he will die of heart-attack" some will prostrate before the doctor and plead. The doctor will treat and the patient will recover. After recovery they will claim that the patient has survived by the grace of 'Thiruppathi Ezhumalaiyan' (the deity in Thiruppathi temple).

Such things are happening in politics. The DMK served as sappers and miners in the crusade to defend democracy and to end autocracy of Mrs. Gandhi. It gave the first call to rise against her despotism. As a consequence the DMK is even now bearing the brunt of it. Like the devotees of the deity of Thiruppathi temple there are some people who shint at the top of their voice that democracy has successfully been defended by the grace of Goenka.

It is but a freak of fortune —purely an accident. Yet the dailies claim undue share in the honour. The predict the findings of the Sarkaria Commission.

It is reported in the *Indian Express* that the interium report was submitted early last year and it covered seven of the 28 allegations referred to the Commission. The Commission had found six of the seven allegations 'proved either wholly or partly'".

It is a proverb that 'a bad beginning will always result in a bad ending'. The Sarkaria Commission had commenced and concluded its enquiry amidst emergency atrocities and coercive presuves.

The interium report was submitted early last year. The Commission had found that except 2 charges the other five charges have not been proved conclusively. And that those two persons who were found guilty in the charges proved are not members of the DMK Party now. They are members of the AIADMK Party. Neither do we agree with the tyrannical circumstances under which the enquiry was conducted nor do we admit its findings on the grounds only of their being members of the AIADMK. If we consider the political animosity which grativated the institution of the Commission of Enquiry the fact that some charges out of 28 charges have been dismissed as being unfounded is in itself an unexpected surprise.

It is claimed that Kuldip Nayar and his prophet have discerned the following findings of the Commission:—

"There was a DMK man even at the village level sanction for a price, any application to the Government for a concession. Whether the plea was power, water, loan or licence, it had to be 'approved' by a particular DMK man before the Government would sanction it."

What is evidence for this finding of the Commission? We may be enlightened when the full report is published. Who are the witnesses? It may become clear when the

(See Page : 11)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009